# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 3 இதழ் : 8 ஜூலை 2024

**இந்த இதழில்...**

**முருகனின் முதல் கற்றளிக் கோயில்**



SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI

# உங்கள் கனவு இல்லம்
# இனி ஒரு கனவு இல்லை.

## இன்றே சேமிக்க துவங்குவோம்!!!

1 இலட்சம் சீட்டு

முதல்

1 கோடி சீட்டு

வரை....




ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்

SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI

78th ANNIVERSARY

எங்களின் வெற்றிப்பயணத்தில்
மேலும் ஓர் மைல் கல் உங்களுடன்...

பதிவு அலுவலகம்:
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474


நிர்வாக அலுவலகம்:
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

மத்திய அலுவலகம்:
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

https://www.sreevisalam.com/
போன்: 86670 03356

# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்




GET IT ON
Google Play

## வணக்கம் வாசகர்களே...

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

**Naam Nagarathar Mobile App**

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...




# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

மலர் : 3 இதழ் : 8 ஜூலை 2024

இலவச வெளியீடு

**பதிப்பாசிரியர்**

இராம.சொக்கலிங்கம்
நற்சாந்துபட்டி

---

**இதழாசிரியர்**

உமையாள்

---

**ஆலோசகர்**

நா.சோமசுந்தரம்

---

**இதழ் வடிவமைப்பு**

ச. தஸ்லிம்

---

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை
நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,
கோயம்புத்தூர் – 641043.

---

**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534


---

கட்டுரைகள் மற்றும் இதர படைப்புகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

# வளவுக்குள்...

**அன்பு வாசகர்களுக்கு...**

**வணக்கம்....!**

ஒவ்வொரு விசேஷத்திலும் நம் வீட்டு வளவுக்குள் நமது உறவுகளைச் சந்தித்து மகிழ்வு கொள்வதைப் போல், ஒவ்வொரு மாதமும் இம்மலர் வாயிலாக வாசக உறவுகளாகிய உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி!

நகரத்தார்கள் வாசிப்பின் ஓர் அங்கமாக வலம் வரும் நமது மின்னிதழுக்கு ஆதரவு தரும் அனைவருக்கும் முதற்கண் எங்களின் பணிவான நன்றிகள்!

இன்றளவும் நகரத்தார் பெருமக்களின் இஷ்ட தெய்வமாக விளங்குபவன் முருகனே." செட்டிக் கப்பலுக்குச் செந்தூரான் துணை" என்றும், வேலை வணங்குவதே வேலை என்றும் வாழ்ந்தவர்கள் நகரத்தார்கள்.

பொதுவாக தென்னிந்திய பாரம்பரியத்தின் படி கார்த்திகை நாளே முருகன் வழிபாட்டிற்கு உகந்த நாள் ஆகும். அதிலும் தெய்வ வழிபாடுகள் செய்ய உகந்த ஆடித் திங்களில் வரும் கார்த்திகை நாள் மிகவும் சிறப்பிற்குரியது. ஆடிக் கார்த்திகையில் ஆறுமுகனை வழிபடத் தேடிவரும் நன்மை என்பது தமிழ் ஆன்றோர் வாக்கு ஆகும்.

இன்னும் சில தினங்களில் ஆடிக் கார்த்திகை வரவிருக்கிறது. முருகனை கொண்டாடும் விதமாக இந்த இதழில் முருகனின் முதல் கற்றளிக் கோவில் குறித்து காணவிருக்கிறோம். இந்தக் கோவிலானது அன்று நம் நகரத்தார் ஊர்களில் ஒன்றாக இருந்த கண்ணனூரில் அமைந்துள்ளது என்பது அனைவரும் அறியாத செய்தி.

மிகச் சிறந்த பெருமை வாய்ந்த இக் கோயில் இருக்கும் ஊரில் அக் கோயில் கண்டுகொள்ளப்படாமல் இருப்பது வருத்தம் அளிக்கிறது. முருகனை அனுதினமும் வழிபடுபவர்கள் நம்மவர்கள். ஊர் கூடித் தேர் இழுப்பது போல் இந்த ஆலயத்தை அனைவரும் அறியும் வண்ணம் செய்து இணையில்லா முருகனருள் பெறுவோம்.

வழக்கம் போல் மொழி, பண்பாடு, கலாச்சாரம், சமூகப் பணிகள், நிகழ்வுகள், என பன்முகப் பகிர்வாய் நமது இதழ் தனது பங்களிப்பை தொடர்கிறது. வாசகர்கள் எந்நேரத்திலும் எப்போதும் மின்னிதழை வாசிக்க ஏதுவாக அண்மையில் மின்னிதழின் MOBILE APP வெளியிடப்பட்டு தற்போது உலகளாவிய பாட்டில் உள்ளது. மேலும் அனைவரது ஆலோசனைகளையும் கருத்துக்களையும் கேட்டு நமது மின்னிதழில் தேவையான மாற்றங்களை அவ்வவ்போது செய்த வண்ணம் இருக்கின்றோம்.

நகரத்தார்களிடையே வாசிப்பை வளர்க்கும் விதத்தில் தொடங்கிய எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம்.

'இது நமது பத்திரிக்கை, நம் எண்ண வெளிப்பாடு என்று நாம் அனைவரும் கொண்டாட வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

இதழை தொடர்ந்து வாசிப்பதோடு மற்ற நகரத்தார்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். மேலும் நமது மின்னிதழின் வளர்ச்சியில் பங்களிக்கும் வகையில் மலரில் விளம்பரம் செய்ய விரும்புபவர்கள் மலரின் மின்னஞ்சலிலோ அல்லது வாட்ஸாப் எண்ணிலோ தொடர்பு கொள்ளவும்.

இதழ் குறித்த தங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் தங்களது படைப்புகளை naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!



நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

அன்புடன்

இராம.சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்


PM
SWITCH TO THE FUTURE
PALLATHUR MOTORS LLP
PETROL
RIDER LIFE
SALARY வந்தா உடனே ,
பெட்ரோல் - க்கு
ஒரு 2000 to 4000 தனியா
வைக்கணும் !
PETROL STATION
ELECTRIC
RIDER LIFE
SALARY வந்தா உடனே,
Extra 2000 to 4000
Saving - ல கோல்டு
வாங்கலாமா இல்ல,
சீட்டு போடலாமானு
யோசிக்கலாம்...!
ELECTRIFY YOUR
JOURNEY NOW
Go far and wide with just
a single charge
LECTRIX
Book Your
TEST DR!VE
Now!!
மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735
பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

# இந்த இதழில்....


**நமது சிந்தனைக்கு**

- அவமானத்தை வெகுமானமாக மாற்றுங்கள்! – கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா . . 14

**கவிச்சோலை**

- சிறப்போ சிறப்பு –கவிஞர் எம்.சோலை காரைக்குடி. . . . . . . . . . . . . . . . . . . . . 22
- பெருந்தலைவர் – அரு. சிவகாமி இராமனாதன் ஒக்கூர் –நவிமும்பை . . . . . . . . 46

**வாழ்வியல்**

- பெண் கதவு... ஆண் பூட்டு..! – சேவு.முத்துக்குமார் காரைக்குடி . . . . . . . . . . . . 23

**பக்தித் தொடர்**

- ஏட்டில் இல்லாத மகாபாரதக் கதைகள் – புலவர் த.கோவேந்தன், டி. லிட் . . . . . . 28

**சிறுவர் பக்கம்**

- மழலை மழைத்துளிகள்..!!! கல்லல் மீ.மணிகண்டன் Texas, USA . . . . . . . . . . 33

**சிறப்புக் கட்டுரை**

- முருகப் பெருமானின் முதல் கற்றளிக் கோயில் – பேரா.கு.அன்புமெய்யப்பன் . . . .34

**சமையல்**

- செட்டிநாடு கத்திரிக்காய் பொடி வறுவல் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 47

**படித்ததில் பிடித்தது**

- வாழ்க வளமுடன் – ஒரு மந்திரச் சொல். . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 51

**உணவே மருந்து**

- கம்பு சாப்பிட்டால் கிடைக்கும் ஆரோக்கியம்! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 55

**மொழி**

- வாங்க பேசலாம் ..! – – பேரா. கு. அன்புமெய்யப்பன் . . . . . . . . . . . . . . . . . . . . 62

**நிதி மேலாண்மை**

- பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்... க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ . . . . . . . . . . . 67

**ஜோதிடம்**

- நீங்கள் எப்படி... சிம்ம லக்னம்..! – ஜோதிடர் எல்லி . . . . . . . . . . . . . . . . . . . . . 79

# விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

நகரத்தார் வாசிப்பின் ஓர் அங்கமாக மாதந்தோறும்
நாம் நகரத்தார் மின்னிதழ் உலகளவில் வெளிவருகிறது.
பெரும்பான்மை நகரத்தார்களை சமூக இணையதள
ஊடகங்களின் வழி எளிதில் சென்றடையும்
நமது மின்னிதழில் உங்கள் நிறுவனம் மற்றும் தாங்கள்
சார்ந்த விளம்பரங்கள் இடம்பெற்றால் உலகளாவிய
நகரத்தார்களை எளிதில் சென்றடையும் .

நமது இதழில் விளம்பரம் செய்ய

ஒரு பக்க விளம்பரத்திற்கான
கட்டணம் ரூபாய் 350/= மட்டுமே

ஓர் ஆண்டிற்கு ( 12 இதழ்கள் ) விளம்பரத்திற்கான
கட்டணம் – ரூபாய் 4000/= மட்டுமே

குறைந்த செலவில் தங்களது விளம்பரங்களை
நமது மின்னிதழில் வெளியிட்டுப் பயன் பெறுங்கள்.

**மேலும் விபரங்களுக்கு**

9791776534
naamnagarathar@outlook.com

VALATHI
Since 2005

உ

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## வளத்தி ஸ்ரீ சிட் பண்ட்ஸ் (பி)லிட்.

## ஸ்ரீ முத்துமீனா சிட் பண்ட்ஸ் (பி)லிட்.

பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை

**எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு**

**ரூ.1,00,000/- முதல்**
**ரூ.25,00,000/- வரை**

அதிகபட்ச உச்சவரம்பு 25% முதல் 40% வரை

பல்லாண்டு கால நம்பிக்கை! நாணயம்! நேர்மையான அணுகு முறை!

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

0431-2760064,80
3569950,7968005.

துவக்கம்
2005

94439 86143

# TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.

## VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,

## SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

C-145D, NVV கேஸ்டில் முதல் தளம்
6வது கிராஸ் கிழக்கு, தில்லைநகர்.
திருச்சிராப்பள்ளி 620 018
தொடர்புக்கு: 94878 85143, 90809 78057,
0431-2760064,

9/1, (4/1) அருணோதயா அபார்ட்மெண்ட்,
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093.
Cell : 91235 71029,

50, தெற்கு மாரட் வீதி, (ஸ்டேட்பேங்க் ஏ.டி.எம் மாடியில்)
மதுரை - 625 001. Cell : 93616 07776, 89034 90064

tvcfpl@gmail.com www.valathichitfunds.com

★ வாய்மையே வெல்லும் ★

உ
சிவமயம்
மரகதவிநாயகர் துணை

தேவகோட்டை

# அருள்மிகு கோட்டையம்மன் கோயில் திருவிழா

நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| 1 | 22.07.2024 | ஆடி மாதம் 06உ, திங்கட்கிழமை<br>**மேடை போடுதல் மாலை 6.00 மணி** |
| 2 | 23.07.2024 | ஆடி மாதம் 07உ, செவ்வாய்க்கிழமை<br>முதல் பொங்கல் |
| 3 | 26.07.2024 | ஆடி மாதம் 10உ, வெள்ளிக்கிழமை<br>சிவன்கோயிலில் இருந்து காலை 9.00 மணிக்கு<br>**பால்குடம் புறப்படுதல்**<br>சிவன்கோயிலில் இருந்து மாலை 6.00 மணிக்கு<br>**பூத்தட்டு புறப்படுதல்** |
| 4 | 30.07.2024 | ஆடி மாதம் 14உ, செவ்வாய்க்கிழமை<br>**புள்ளிப் பொங்கல்** |
| 5 | 02.08.2024 | ஆடி மாதம் 17உ, வெள்ளிக்கிழமை<br>மாலை 6.00 மணிக்கு **திருவிளக்கு பூஜை** |
| 6 | 04.08.2024 | ஆடி மாதம் 19உ, ஞாயிற்றுக்கிழமை<br>மூன்றாவது பொங்கல் |
| 7 | 05.08.2024 | ஆடி மாதம் 20உ, திங்கட்கிழமை<br>**காலை 9.00 மணி அளவில்**<br>**அம்மனை நீரில் வைத்தல்** |

இப்படிக்கு
**நடப்பு நிர்வாகிகள்**
தேவகோட்டை 40 வகை நகரத்தார் டிரஸ்ட்.
தேவகோட்டை

# நாட்டுக்கோட்டை நகரத்தார் அமைப்பு,

# அபுதாபி

## நகரத்தார் மாணவ/ மாணவிகளுக்கான கல்வி உதவி

**இளங்கலை**

**மாணவ / மாணவிகளுக்கு மட்டும்**

**கீழ்காணும் முகவரியில் விண்ணப்பிக்கலாம்**

**இணையத்தளம் (Website) - www.nnaeducation.com**

## நாள் 31-08-2024 வரை

**மேலும் தகவல்கள் மற்றும் சந்தேகங்களுக்கு பின்வரும் மின்னஞ்சலைத் தொடர்பு கொள்க**

**education.nna@gmail.com**

**தேவையான ஆவணங்கள்:**

**1. Recent Mark sheets 2. Receipt Fees Paid for 2023-24 3. Recommendation Letter from Nagarathar Sangam/Kovil or Referred by NNA member 4. Income Certificate or Proof of Income 5. Bank Account Details – Bank Passbook Details 6. Applicant Passport size Photo.**

உ
சிவமயம்

# நகரத்தார் சிறுவாபுரி பாதயாத்திரை டிரஸ்ட்.

(பதிவு எண். 7959/96)

## சிறுவாபுரி நகரவிடுதி

### விரிவாக்கம் – புதுப்பிக்கப்பட்ட கட்டிடம்

## திறப்பு விழா

அன்புடையீர்! வணக்கம்,

சிறுவாபுரி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருவருள் முற்கொண்டு நிகழும் குரோதி வருடம் **ஆடி மாதம் 5-ஆம் தேதி (21.07.2024) ஞாயிற்றுக்கிழமை** அன்று காலை 9.00 மணியளவில் நகரவிடுதியின் விரிவாக்க கட்டிடம் மற்றும் புதுப்பித்த கட்டிட திறப்பு விழா நடைபெற உள்ளது. தாங்களும் தாங்கள் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்துத் தரும்படி அன்போடு வேண்டி கேட்டுக்கொள்கிறோம்.




இங்ஙனம்,

**நகரத்தார் சிறுவாபுரி பாதயாத்திரை டிரஸ்ட்.**

சிறுவாபுரி.

# அவமானத்தை வெகுமானமாக மாற்றுங்கள்!



– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.

நண்பனோடு நேற்றைய தினம் நான் உரையாடிய பொழுது, அவன் ஒரு சந்தேகத்தை என்னிடம் எழுப்பினான்.

அவனது சந்தேகம் இதுதான்: "செல்வத்தை சேமித்து வைக்கப்பழகு!" என்பார்கள்.எனது குருவோ, என்னிடம் சொன்னார்,"செல்வத்தை சேமிக்க மறந்தாலும் தவறில்லை,ஆனால் அவமானத்தை சேமித்து வைக்க மறக்காதே!" என்றார். அவமானத்தை சேமித்து வைத்தால் நமக்கு என்ன பலன் கிடைக்கும்? வாழ்க்கை சுகமாக இருக்குமா? என்றான்.



உன்னுடைய குருநாதர் வாழ்க்கை சுகமாக இருக்கும் என்ற நோக்கத்தில், "அவமனத்தைச்சேர்த்து வை!" என்று சொல்லி இருக்க மாட்டார்.

நீ பட்ட அவமானங்களை யெல்லாம் சேர்த்துவைத்து, அவற்றை ஒவ்வொன்றாக நினைத்துப்பார்த்து, அதிலிருந்து நீ பாடம் கற்றுக்கொண்டால், உன் வாழ்க்கை சுயமாக மாறி,மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக நீ விளங்க முடியும் என்ற பொருளில்தான் சொல்லியிருப்பார் என்றேன்.

உடனே அவன் என்னைத் திருப்பிக்கேட்டான், என்னை யாராவது அவமானப்படுத்தினால், எனக்கு உடனே கோபம் தானே வருகிறது. நம்மை அவமானப்படுத்தியவர் களை பழிதீர்க்க வேண்டும் என்று தானே மனம் துடிக்கிறது என்றான்.



ஆம், நீ உன் மனநிலையை எடுத்துச் சொன்னாய்! பொதுவாக எல்லோர்க்கும் இதுபோன்ற உணர்வுதான் வரக்கூடும். ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையில் உயர்வையும்,தாழ்வையும் காணக்கூடும். வெற்றி என்பது எப்படி இருக்கும்? என்று நீ உணர வேண்டுமானால், தோல்வி என்ற ஒன்றை நீ சந்திக்கும் போதும், அனுபவிக்கும் போதும் மட்டுமே உணர முடியும்.

ஒவ்வொரு முறையும் நீ பிறரால் அவமானப்படும் பொழுதுதான், நம்மை அவமானப்படுத்துவோரின் உண்மையான முகம் நமக்குத் தெரியவரும். அதன் மூலம், யார் நண்பர்? யார் விரோதி? யார் நல்லவர்? யார் கெட்டவர்? என்பதும், அவருடைய உண்மையான முகம் எது? என்றும் தெள்ளத் தெளிவாகத் தெரியும்.

நமது வெற்றிகளை பொறுக்க முடியாதவர்கள் வெகுவேகமாக நம்மை அவமானப்படுத்த முயற்சிப்பதும் தெரிய வரும். நம்மை அவமானப்படுத்த முனையும் பலரும் அதனை நேரிடையாகச் செய்யாமல் வேறு யார் மூலமாவது செய்து மகிழ்கிறார்கள்.

இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்றால், நம்மோடு வாழ்ந்த மனிதர்கள் நம்முடைய உயர்வைக் கண்டு பொறாமைப்படத் தொடங்குகிறார்கள். அநேகமாக அவர்கள் கொண்ட பொறாமையின் மிகுதியால் நம்மை அவமானப்படுத்துகிறார்கள்.

எப்போதும் வாழ்க்கையில் நம்மைச்சுற்றி இருப்பவர் கள் தான் எதிரிகள். எதிரிகள் என்று எவரும் தனியாக உருவாவது இல்லை.

இன்னும் உனக்குப்புரியும் படி சொல்கிறேன் கேள்! இந்தியாவின் மாநிலங்களவை உறுப்பினராகவும், ஒரு வாரப் பத்திரிக்கையின் ஆசிரியராகவும், சிறந்த பேச்சாளராகவும் விளங்கிய ஒருவர், சிறுவனாக இருந்த பொழுது அவர் வாழ்ந்த ஊரில், ஒரே ஒருவர் வீட்டிற்கு மட்டும்,"இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிக்கை வருமாம்.

சிறுவனாக பள்ளியில் படித்துக்கொண்டிருந்த பொழுது, தான் ஆங்கிலம் கற்றுத்தேர வேண்டும் என்ற ஆசைப்பட்டாராம். அந்தப்பிரமுகர் வீட்டிற்குச் சென்று, முதல் நாள் வந்த ஆங்கிலப் பத்திரிக்கையைத் தருமாறு கேட்பாராம்.

அதற்கு அந்தப்பிரமுகர், நீ யெல்லாம் ஆங்கிலப் பத்திரிக்கையைப் படித்து என்ன சாதிக்கப் போகிறாய்? நீ போய் உன் பாடத்தை முதலில் படி! அப்புறம் பேப்பர் படிக்கலாம்! வெளியே போ! என்று அவமானப்படுத்தி அனுப்பி வைப்பராம்.




அப்போதே அந்த இளைஞன் தான் பட்ட அவமானத்தை போக்க வேண்டும் என்ற வைராக்கியத்தோடு கல்லூரி சென்று படித்து, முதுகலை ஆங்கில லிட்ரேச்சர் பட்டம் பெற்று, தனது ஊருக்கு வந்த பொழுது, அவர் படித்த பள்ளியில் அவருக்கு ஒரு பாராட்டு விழா நடந்தது. அந்தப் பாராட்டு விழாவிற்கு தலைமையேற்று பாராட்டியது, ஆங்கிலப் பத்திரிக்கை படிக்க உனக்குத்தகுதியில்லை என்று சொல்லி அவனை அவமானப்படுத்தியவர் தான். அந்த விழாவில் ஏற்புரையாற்றிய இளைஞர் சொன்னாராம். இன்றைக்கு நீங்கள் அனைவரும் என்னைப் பாராட்டுகிறீர்கள் என்றால் அதற்கு முழு முதற்காரணம் "என்னை ஆங்கிலப் பத்திரிக்கை படிக்கத்தகுதி யானவன் இல்லை! நீ வெளியே போ!"என்று அவமானப்படுத்தி வெளியே விரட்டியவர் தான் இன்றைய விழாவின் தலைவர் என்று சொன்னதும் அரங்கமே அதிர்ந்ததாம்.

"தான் பட்ட அவமானத்தை அன்று தான் நான் வெகுமானம் ஆக்கிக் கொண்டேன்!" என்று பின்னாளில் தனது வாழ்க்கை வரலாற்றை நூலாக எழுதும் பொழுது பதிவு செய்கிறார் அந்தப் புகழ்பெற்ற பேச்சாளர்.

அவமானப்படுத்தும் மனிதர்களை நாம் வாழ்க்கையில் எதிர் கொள்ளத்தான் வேண்டும். அவர்களது அவமானத்திற்கு நாம் பயந்து,ஒளிந்து விடக் கூடாது. துணிச்சலோடு எதிர் கொண்டு வெற்றி பெற வேண்டும்.




இத்தகைய மனிதர்கள் மீது நாம் நிதானமாக சினம் கொள்ளலாம். பாரதியார் கூடச்சொல்வார், "ரௌத்திரம் பழகு! என்பார். "ரௌத்திரம் "என்ற வட சொல்லுக்கு "வெஞ்சினம்" என்று ஒரு பொருள் உண்டு. வெறும் சினம் அல்ல.மிகக் கடுமையான சினம் என்பது விளக்கமாகும். இன்னும் சொன்னால், "காரியமாற்றும் சினம்"என்றும் சொல்லலாம்.பதிலுக்கு நாம் என்ன செய்வது? என்று திட்டமிட்டு அவமானம் செய்தலை எதிர்க்கும் சினம்.

அவமானம் நண்பர்களால் ஏற்பட்டாலும் உறவுகளால் ஏற்பட்டாலும் அந்நியர் களால் ஏற்பட்டாலும் நெல்முனையளவும் கவலை கொள்ளாதே! எதனால் இது? எங்கு தவறு? வேண்டுமென்றே செய்யப்படுகிறதா? அல்லது விவரமில்லாத விஷயமா? என்பதை யோசித்து மிக வேகமாக ஒரு முடிவு எடுக்க வேண்டும்

எதிர்க்க முடியாத சூழலில் எதிர்ப்பைக் காட்ட முடியாத நிலையில் கூட உங்களுக்கு கடும் அவமானம் ஏற்படும். அப்போது அவமானத்தை நன்கு அனுபவியுங்கள்.

அவமானப்படுத்துதலை புரிந்து கொண்டு அதற்காக கண்ணீர் சிந்தாமல், அவமானத்தை உள்மனதில் இறுக்கி வைத்துக் கொள்ளுங்கள்.

மீண்டும் உனக்கு பாரதியாரின் வரிகளையே நினைவு படுத்துகிறேன்.

"பாதகம் செய்பவரைக் கண்டால் நீ பயம் கொள்ளலாகாது பாப்பா"
மோதி மிதித்துவிடு பாப்பா! அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!"
என்று பாப்பாவுக்கே சொன்னவர் பாரதியார்.

அவமானப்படுத்துவோர்க்கு எதிரே நீ வெற்றி பெற்று சிரித்து சிலாகித்து நின்றுவிட்டால், அவர் தானாகவே குன்றிப்போய் விடுவார்.




வாழ்வில் நீ வெற்றிபெற வேண்டும் என்று நினைத்தால், அவமானப் படுங்கள்! அவமானத்திற்கு அஞ்சாதீர்கள்! அவமானம் ஒரு உரம், கடுமையான உரம், காரமான உரம். அதனால் தான் உன்குரு, "அவமானத்தைச்சேர்த்து வை! என்று சொல்கிறார்.

அனைவரது வாழ்விலும் பல அவமானங்கள் கிடைத்திருக்கும். அந்த அவமானத்தைப் பெற்றுக் கொண்டு,காயத்தோடு சிலர் சிரிப்பதை நீ பார்த்து இருப்பாய்! அது அவ்வளவு எளிதல்ல நண்பனே" காயங்களுடன் சிரிக்க ஒரு சிலரால் தான் முடியும்! அப்படிச் சிரிக்க நீ பழகிக் கொண்டால் எந்த காயமும் உனக்குப் பெரிதாகத் தெரியாது!

இன்னுமொரு தலைப்போடு அடுத்த திங்களில் உங்களைச் சந்திக்கிறேன் வாசகர்களே! அதுவரை காத்து இருப்பீர்களா?



கட்டுரை ஆசிரியர்
தொடர்புக்கு: 9791033913,
aamchennai@gmail.com



நாம் நகரத்தார்
சமூக இணையதள மின்னிதழ்

இப்போது உங்களின் மேம்பட்ட
வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

Naam Nagarathar Mobile App

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

GET IT ON Google Play

# ஸ்ரீ நித்யகல்யாணி சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

SRI NITHYAKALYANI CHIT FUNDS (P) LTD.

Sign of Commitment NCF

Our culture is financial Discipline

Money is Easier when your
Proactive Plan with Nithyakalyani

1983 - 2024
42nd
ANNIVERSARY

1 Lakhs to Crore

**Sri Nithyakalyani Chit Funds(P) Ltd.,**
#22, Lakshmi Road, TVS Nagar,
Madurai - 625 003.
Ph.No: 0452 - 2692680, Mob.No: 9786300304,
E-mail : sncfco@gmail.com

## Branches

| | | | |
|---|---|---|---|
| Madurai Main 98430 93250 | Trichy 98432 91654 | Arasaradi/mdu 73391 25777 | Thirunagar/mdu 84899 10191 |
| Dindigal 98432 91652 | Coimbatore 82200 52338 | Erode 75581 99888 | Srivilliputhur 70944 61192 |
| Anna Nagar/mdu 98432 91653 | Reserveline/mdu 98430 93256 | Aruppukkottai 73589 91777 | Dindigul (Regl.) 75581 99777 |

# சிறப்போ சிறப்பு...

நல்ல மனம் வாழ்த்தும் போது
வாழ்க்கை பெறும் சிறப்புங்க
நம்பிக்கை உடன் இருந்தால்
வாழ்க்கையெல்லாம் சிறப்புங்க

அழுத போது துடைக்கையிலே
அன்னை கைகள் சிறப்புங்க
அழுது அழுது புலம்பையிலே
மகிழ்ச்சி வந்தா சிறப்புங்க

இறந்து போன கண்ணதாசன்
பிறந்து வந்தா சிறப்புங்க
இறந்த பின்னும் நம் மனதில்
வாழ்கிறாரே சிறப்புங்க

விடிந்த பின்னும் கனவு கண்டா
வசந்தம் வரும் சிறப்புங்க
கைகள் இரண்டில் வெற்றி நிறைய
முயற்சி செய்தா சிறப்புங்க

சோம்பேறி சோம்பல் மறந்து
சாதித்தால் சிறப்புங்க
வியர்வை சிந்தும் ஊழியர்கள்
அதிபரானால் சிறப்புங்க



– கவிஞர் எம்.சோலை.
காரைக்குடி



பெண் கதவு... ஆண் பூட்டு..! – 8

# அமைதி, நிம்மதி, ஆனந்தம்





– சேவு.முத்துக்குமார்
காரைக்குடி
+91 94432 88931

ஒரு பெண்ணோட மதிப்பு அவள் இருக்கும் போது தெரியாது; அவள் இல்லாத போதுதான் தெரியும்.

தொலைத்து விடக் கூடாது என்ற பயம்தான் கணவனையோ, மனைவியையோ சண்டை போட வைக்கிறது.

ஒரு மிகப்பெரிய அமைப்பு, பொது மக்களுக்குப் போட்டி ஒன்று நடத்தியது. போட்டியின் தலைப்பு "அமைதி – நிம்மதி – ஆனந்தம்". ஒரே வரியில் கவிதையாகக் கூற வேண்டும் 5000 பேர் போட்டியில் கலந்து கொண்டனர். ஒருவர் பேசினார், ஒரே வரிதான், ஓடி வந்து போட்டித் தேர்வாளர், அவரை வாரி அணைத்துப் போட்டியில் வென்றதாக அறிவித்தார் பரிசளித்து மகிழ்ந்தார். அவர் கூறிய ஒருவரிக் கவிதை.

என் மனைவி தூங்குகிறாள்

ஆம் ஆண்களுக்கு வாழ்க்கையில் அமைதி – நிம்மதி – ஆனந்தம் மனைவி தூங்கும் போதோ, அல்லது வெளியூர் செல்லும்போதோ கிடைக்கிறது.

ஒரு படத்தில் தன் மனைவியை வெளியூருக்குப் பேருந்தில் ஏற்றி விட்டு நகைச்சுவை நடிகர் ஜனகராஜ். "என் பொண்டாட்டி ஊருக்குப் போயிட்டா" என பேருந்து நிலையத்தில் மகிழ்ச்சியோடு அங்கும் இங்கும் கூவிக் கொண்டு அலைய, பேருந்து பழுதாக, மனைவி அவர் எதிரே வந்து நிற்க, சர்வமும் அடங்கி அவர் நிற்பது, திரைப்படத்தில் நாம் கண்டு மகிழ்ந்த காட்சி.

நகைச்சுவையாக இருந்தாலும் சில பெண்கள் சர்வாதிகாரப் போக்கில் கணவனை அடக்கி ஆள்கிறார்கள் என்பதே உண்மை வேறு வழியின்றி அமைதி – நிம்மதி – ஆனந்தத்தை மனைவிகள் தூங்கும் போதோ, வெளியூர் செல்லும் போதோ கணவர்கள் அடைகிறார்கள், ஆகவே அமைதி, நிம்மதி, ஆனந்தத்தை கணவன் மனைவியிடமும், மனைவி கணவனிடமும் பெறுதலே சுகமான இல்லறம்.

பெரும்பாலான கணவர்களின் வருத்தம் இவ்வாறாகத்தான் இருக்கிறது. திருமணத்திற்கு முன் நான் எனது மாமியார் வீட்டிற்குச் சென்றபோது எனது மாமியார் வீட்டு நாய் குரைக்கும். மனைவி என்னை வரவேற்பாள் . ஆனால் இன்றோ மனைவி குரைக்கிறாள். நாய் என்னை வரவேற்கிறது என்று. கணவனோ, மனைவியோ எப்போதும் ஒரே நிலையில் இருந்து அமைதி,நிம்மதி, ஆனந்தத்தை இருவரும் இணைந்தே பெற முயல வேண்டும்.

"இன்றைய சேமிப்பு நாளைய முதலீடு"

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA



**PL RAMANATHAN (KANDANUR)**

**INSURANCE ADVISOR**
**LIC of india, Thiruvotriyur Branch**
**Mobile : 99 40 132 132**

- ★ To take care of Childresn's Education
- ★ To Create Corpus for Child' marriage
- ★ To Create Corpus for Retirement Expenses
- ★ To save your Taxes at the time of Investment & Maturity

**LIFE INSURANCE CORPORATION OF INDIA**

Off Thiruvottriyur Branch "Jeevan Pallava", No. 142, 143 & 144, T.H. Road, Tondiarpet, Chennai-81. Resi:: G-1, Plot No. 15, Door No. 10, Teachers Guild Colony, Villivakkam, Chennai-49.
Tel.: (O) 2345 1530 (M) 99401 32132
E-mail: ourlicplr@gmail.com, licplr@yahoo.com

LIC LIFE INSURANCE CORPORATION OF INDIA

உ
சிவமயம்

# 35 ஆம் ஆண்டு நகரத்தார் சிறுவாபுரி பாதயாத்திரை மற்றும் காவடி அழைப்பிதழ்

அன்புடையீர், வணக்கம் !

சிறுவாபுரி ஸ்ரீ பாலசுப்ரமணிய சுவாமி திருவருள் துணைக்கொண்டு வருகின்ற ஆடிக்கிருத்திகை திருநாளிற்கு **முப்பத்து ஐந்தாம் ஆண்டு பாதயாத்திரையாக** காவடி முத்திரைகளுடன் பக்தர்கள் அனைவரும் **அடியார் படுதுயர் களையும்** என்று சுந்தரால் பாடப்பெற்ற சென்னை திருமுல்லைவாயில் மாசிலாமணீஸ்வரர் கோயிலில் இருந்து, சுபகிருது வருடம், ஆடி மாதம் 11ஆம் தேதி (27-07-2024) சனிக்கிழமை இரவு 7.00 மணியளவில் புறப்பட்டுச் செல்கின்றனர். ஆடி மாதம் 13ஆம் தேதி (29-07-2024) திங்கட்கிழமை **ஆடிக்கிருத்திகை** அன்று காலை 10.15 மணியளவில் **காவடிகள், பால்குடங்கள் திரு. கண்டனூர் அருளடியார் பழ. பழனியப்ப செட்டியார்** (சாமியாடி ஐயா) அவர்கள் முன்னிலையில் **சிறுவாபுரி பாலசுப்ரமணிய சன்னதியில்** செலுத்துதல், பக்த கோடிகள் அனைவரும் கலந்துகொண்டு ஸ்ரீ சிறுவாபுரி முருகனின் திருவருளைப் பெற வேண்டுகிறோம்.

**குறிப்பு :** சிறுவாபுரி விடுதியில் எல்லா மாத கார்த்திகைளிலும் காலை, மதியம் இரு வேளையும் பஜனை மற்றும் அன்னதானம் நடைபெறுகிறது.

இப்படிக்கு
**நகரத்தார்**
**சிறுவாபுரி பாத யாத்திரை டிரஸ்ட்**

**காவடி, பால்குடம் எடுக்க விரும்புவோர் கீழ்கண்டவர்களைத் தொடர்பு கொள்ளவும்**

நடப்பு காரியக்காரர்கள் :

| | |
|---|---|
| SP. சிதம்பரம் செட்டியார்<br>புரவலர் | 94442 74720 |
| K. சிதம்பரம் செட்டியார்<br>தலைவர் | 90802 64411 |
| PR. மீனாட்சி சுந்தரம் செட்டியார்<br>செயலாளர் | 94441 83688 |
| S. முத்தையா சம்பத் செட்டியார்<br>பொருளாளர் | 97100 66980 |

அறங்காவலர்கள்

| | |
|---|---|
| PL. செல்வநாதன் செட்டியார் | 94440 52708 |
| RM. முத்துராமன் செட்டியார் | 94441 75305 |
| V. ராமநாதன் செட்டியார் | 94444 28142 |
| V. பழனியப்பன் செட்டியார் | 98405 53399 |
| சபா. லெட்சுமணன் செட்டியார் | 63831 86163 |
| M. கண்ணன் செட்டியார் | 94449 01959 |
| M. சோமசுந்தரம் செட்டியார் | 82489 36169 |

நமது வேல் வியாசர்பாடி முத்துக்குமாரசுவாமி ஆலயத்தில் வைத்து தினசரி பூஜை செய்யப்படுகின்றது.


**விழா கமிட்டி உறுப்பினர்கள்**

| துணைத் தலைவர் | துணைச் செயலாளர்கள் | துணைப் பொருளாளர்கள் |
|---|---|---|
| பூமி இராமநாதன் செட்டியார்,<br>94440 02828 | S. சொக்கலிங்கம் செட்டியார்,<br>94435 75942 | PL. லெட்சுமணன் செட்டியார்,<br>93823 99911 |
| V. அசோக் குமார்,<br>97896 10856 | காசிஸ்ரீ முனைவர் C. இராகவேந்திரன்<br>94434 02761 | Lion PL. நாச்சியப்பன் செட்டியார்<br>94440 39755 |

RM. பெரியண்ணன் செட்டியார், L. திருமலை, SP. அண்ணாமலை செட்டியார், S.V. பழனியப்பன்

## நிகழ்ச்சி நிரல்

| ஆங்கிலம் தேதி | குரோதி வருடம் ஆடி மாதம் | கிழமை | நிகழ்ச்சி விவரம் | |
|---|---|---|---|---|
| 27.07.2024 | 11 ஆம் தேதி | சனிக்கிழமை | சென்னை திருமுல்லைவாயில் **மாசிலாமணீஸ்வரர் கோயிலில்** மதியம் 2.30 மணி அளவில் காவடி கட்டுதல், இரவு 6.00 மணியளவில் அரோகரா செய்தல் | ஆவடி, **H.V.F.** வள்ளுவர் வாசுகி திருமணமண்டபத்தில் இரவு அன்னதானம் |
| | | | இரவு 7.00 மணியளவில் காவடி பக்தர்கள் அனைவரும் புறப்படுதல் | **H.V.F. ல் பிள்ளையார் கோயிலில் தங்குதல்** |
| 28.07.2024 | 12ஆம் தேதி | ஞாயிறு | அதிகாலை 4.00 மணியளவில் **H.V.F.**ல் பிள்ளையார் கோயிலில் இருந்து **புறப்படுதல்.** | மதியம் திருக்கண்டலம் தங்குதல், அன்று மதியம் 2.00 மணியளவில் புறப்பட்டு **ஆமிதாநல்லூர் வழியாக சிறுவாபுரி சென்று அடைதல்.** |
| 29.07.2024 | 13 ஆம் தேதி | திங்கள் | **காலை 7.25** மணியளவில் சிறுவாபுரி நகர விடுதியில் **மங்கலப் பொருட்கள் ஏலம்** நடைபெறும். | |
| | | | **காலை 10.15 மணியளவில் காவடி முத்திரைகளுடன் பால் குடங்கள் செலுத்தி அபிஷேக ஆராதனை செய்தல்.** | |

நாம் நகரத்தார்
சமூக இணையதள மின்னிதழ்

இப்போது உங்களின் மேம்பட்ட
வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

Naam Nagarathar Mobile App

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

GET IT ON Google Play

ஏட்டில் இல்லா மகா பாரதக் கதைகள் – 27

# பாஞ்சாலி ஏன் சிரித்தாள்?

– புலவர் த.கோவேந்தன், டி. லிட்

பாரதப் போரில் வீடுமர் அர்ச்சுனன் அம்பால் அடிபட்டு வீழ்ந்தார்

வீடுமர் பெருஞானி பகவான் பரசுராமனின் மாணாக்கர் அவர் விரும்பும் போது தான் அவர் உயிர் பிரியும். அத்தகைய வரத்தை அவர் தந்தை, சந்தனு அளித்தார்.

அவர் அம்புபட்டு வீழ்ந்த காலம் தட்சிணாயணம் உத்தராயண காலத்தில் உயிர் துறந்தால்தான் மோட்சம் கிட்டும் ஆதலால் உத்தராயணம் வரும் வரை, அர்ச்சுனன் அமைத்துக் கொடுத்த அம்புப் படுக்கையில் படுத்திருந்தார்

அப்போது தருமன் அவரை வணங்கி, அரசநீதி அறிவுறுத்தும் படி வேண்டினான் கண்ணபெருமானும் அரச நீதியைத் தருமனுக்குக் கூறும்படி வற்புறுத்தினான்

அம்புப் படுக்கையில் படுத்துள்ள துன்பத்தையும் பொருட்படுத்தாமல், வீடுமர் அரசநீதி கூறத் தொடங்கினார்

அப்போது அருகிலிருந்த பாஞ்சாலி உரக்கச் சிரிக்கத் தொடங்கினாள்



அவள் சிரிப்பதற்குக் காரணம் என்ன என்று வீடுமர் கேட்டார்

"தாத்தா! வேறு காரணம ஏதும் இலலை தாங்கள் பெருஞானி நலலறம முழுவதும் அறிநதவர் உலகிலேயே உயர்ந்த குறிககோளுடன வாழந்தவர். அப்படியிருந்தும் துரியோதனன் சூதாடடம் என்னும வஞ்சனையால், எங்கள் நாட்டைய பறித்துக் கொண்ட போது, அரசநீதி துரியோதனனுககுக கூறவிலலை துச்சாதனன், என்னை மானபங்கப படுததிய போதாவது அறவுரை கூறித் தடுத்திருககலாம் எங்களைக் காட்டுககு அனுப்பாமல தடுத்திருக்கலாம் அப்போது வாய் திறவாமல, தீயவர் செயலுக்கு உடன்பட்டுருந்த நீங்கள். இப்போது அரசநீதி கூறத் தொடங்குவதை எண்ணிப் பார்த்தேன். சிரிப்பு வந்துவிட்டது" என்றாள் பாஞ்சாலி.

"குழந்தாய்! பாஞ்சாலி! நீ நினைத்ததும் சிரித்ததும் ஞாயமானவை தாம் அதற்குரிய காரணம் சொல்ல நான் கடமைப்பட்டுள்ளேன்".

நான் உண்ட உணவு துட்டனாகிய துரியோதனனுடையது அந்த உணவால் உண்டான இரத்தம் என் உடலில் ஓடியது. அந்த இரத்தம் அறநெறியைக் கழுவி, அநீதிச் சேற்றை என்னுள் தேக்கி விட்டது".

"அதனால் தான், என் வாயிலிருந்து அறநெறி வெளிவரவில்லை. இப்போது, அர்ச்சுனன் அம்புகள் என் உடலைத் துளைத்து, அந்த அநீதிக் குருதி முழுவதையும் வெளியேற்றிவிட்டது".



"இப்போது என் உடலில் ஓடுவது. இறை பக்தியாகிய குருதி அதனால் தான் அறநெறி கூற என் உணர்வு என்னைத் தூண்டுகின்றது எத்தகைய தூயவராயினும் தீயவர் உறவும் உணவும் உடையவரானால், தீமை கண்டும் சீறி யெழவிடாமல், உணர்வு மழுங்கிவிடும் என்பதற்கு என் செயல் தக்க எடுத்துக்காட்டு. அன்றைய செயலுக்காக இன்று நான் நாணுகின்றேன் என்னைக் கண்டு நீ சிரித்தமைக்காக நான் வெறுப்படையவில்லை மாறாக உவப்பு அடைகின்றேன்"

என்று கூறிவிட்டுத் தருமனுக்கு அரசநீதி கூறத் தொடங்கினார் வீடுமர்

# கூடைகள் விற்பனைக்கு

அழகான நல்ல தரத்துடன் நீண்ட நாள் உழைக்கக் கூடிய
செட்டி நாட்டு கூடைகள் தயாரித்து விற்பனை செய்கிறோம்

உங்கள் வீட்டு உபயோகத்திற்கு மற்றும்
Return gift Purpose க்கும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் கிடைக்கும்.



தொடர்புக்கு:
N.சித்ரா, ஆத்தங்குடி
9585328941







# ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர மேலாண்மைக் கழகம்

அன்புள்ள செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களுக்கு வணக்கம்,

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்திற்கு பாத்தியப்பட்ட காரைக்குடி தலைமை அலுவலகம் சென்னை, பழனி, மதுரை, தேவிப்பட்டிணம், ஸ்ரீ காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, கல்கத்தா, தாரகேஸ்வரம், நாசிக் முதலிய சத்திரங்கள் சீரோடும் சிறப்போடும் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன.

## காசி மிட்டாய்த் திருவிழா

**29.10.2024,** செவ்வாய்க்கிழமை – மாலை **5.00** மணிக்கு விசாலாட்சி கோவிலில் திருவிளக்கு பூஜை நடைபெறும்.
குரோதி வருடம் ஐப்பசி மாதம் 12ம் தேதி

**30.10.2024,** புதன்கிழமை – காலை **7.00** மணிக்கு சத்திரத்தில் இருந்து சிக்ரா அண்ணாமலையாருக்கு பால்குடம் எடுப்பதும் மற்றும் அபிஷேகமும் நடைபெறும்.
குரோதி வருடம் ஐப்பசி மாதம் 13ம் தேதி
காலை **11.00** மணிக்கு சிக்ரா நந்தவனத்தில் உள்ள அண்ணாமலையார் கோவிலில் திருவிளக்கு பூஜை நடைபெறும்.

**31.10.2024,** வியாழக்கிழமை – தீபாவளி காலை **7.00** மணிக்கு நகரேஸ்வரர் நகரேஸ்வரிக்கு அபிஷேகம் நடைபெறும்.
குரோதி வருடம் ஐப்பசி மாதம் 14ம் தேதி
காலை **10.00** மணிக்கு சத்திரத்தில் மங்கல பொருட்கள் ஏலம் நடைபெறும்.
அன்று மாலை **6.00** மணிக்கு சத்திரத்தில் திருவிளக்கு பூஜை நடைபெறும்.

**30.10.2024 - 01.11.2024** ஆகிய மூன்று தினங்களிலும் மாலை **6.00** மணியில் இருந்து இரவு **8.30** மணி வரை நமது சத்திரத்தில் அமைந்துள்ள நகரேஸ்வரர் கோவிலில் தங்க விசாலாட்சி – ஸ்ரீ சொர்ணலிங்கம் எழுந்தருள செய்யப்படும்.

## நாசிக் கார்த்திக் பூர்ணிமா


நாசிக்கில் அமைந்துள்ள கார்த்திக் ஸ்வாமி கோவிலில் **15.11.2024** மற்றும் **16.11.2024** ஆகிய இரண்டு நாட்கள் கார்த்திக் பூர்ணிமா திருவிழா மிக சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

நகரத்தார் பெருமக்கள் அனைவரும் விழாவில் கலந்து கொண்டு ஸ்ரீ விஸ்வேஸ்வரர் மற்றும் கார்த்திக் ஸ்வாமி அருள்பெற வேண்டுகிறோம்.

இப்படிக்கு
**2023 - 2026**
**காசி சத்திர நிர்வாகக் குழு**

# மழலை மழைத்துளிகள்..!!!

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும் அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை இந்த மழலை மழைத்துளிகள்



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas - USA

## சுறுசுறுப்பாக உடற்பயிற்சி

காலை வேளை உடற்பயிற்சி
... காற்றை உணரும் உடற்பயிற்சி
கால்கள் கைகளை நீட்டிமடக்கிக்
... கலையாய்ச் செய்யும் உடற்பயிற்சி
சோலை பூங்கா கடற்கரையில்
... சொல்லிச் செய்வோம் உடற்பயிற்சி
சுறுசுறுப் பாக உடற்பயிற்சி
... சுகமாய் வாழ உடற்பயிற்சி!



## தலையை ஆட்டும் கோழி



தலையை ஆட்டி நடந்துவரும்
... தானியம் இட்டால் ஓடிவரும்
காலைப் பிடித்துத் தூக்கிடுவேன்
... கொக்கரக் கோவென குரலெழுப்பும்
மூலையில் பின்னிய பஞ்சாரம்
... மாலையில் அங்கே அடைந்திருக்கும்
காலையில் தினமும் முட்டையிட்டு
... கருத்தக் கோழி அடைகாக்கும்!


# முருகப் பெருமானின் முதல் கற்றளிக் கோயில்

**அருள்மிகு பால சுப்பிரமணியர் திருக்கோயில் – கண்ணனூர், திருமயம்**



பேரா. கு. அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

ஆதி மக்களின் வாழ்வு முதன்முதலில் தொடங்கிய இடம் மலை என்று அறிஞர்கள் கூறுவர். பாதுகாப்பிற்காக மலையில் வாழ்ந்த மனிதன் காலம் செல்லச் செல்ல நிலங்களிலும் வாழத் தலைப்பட்டுள்ளான். " குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான்" என்பது பழம்மொழி. எங்கெங்கு மலைகள் இருக்கிறதோ அங்கெல்லாம் முருகன் இருப்பான். மலைப் பகுதிகளில் இருந்த முருக வழிபாடு எப்படி நிலப்பகுதிக்கும் வந்தது? என்ற கேள்வி எழலாம்.



மனிதன் மலையில் வாழ்ந்த காலத்திலேயே வணங்கிய தெய்வம் தான் முருகன். பின் நிலத்தில் வாழ்ந்த மனிதன் அம் முருகனையே வணங்கிவந்துள்ளான். தமிழின் மிகப் பழைமையான நூல் தொல்காப்பியம். அந்நூலில் முருகன் "சேயோன்" என அழைக்கப்படுகிறான். ஆகவே, தமிழரின் மிகத் தொன்மையான தெய்வம் முருகன் என்பதில் ஐயமில்லை.

## நகரத்தாரும் முருகனும்

இன்றளவும் நகரத்தார் பெருமக்களின் இஷ்ட தெய்வமாக விளங்குபவன் முருகனே. நகரத்தார்களுக்கும் முருகப் பெருமானுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. வேல் வழிபாடு இன்றுவரை தொடர்வதை நாம் அறிவோம். முருகனை, செட்டி முருகன் என்றும் அழைப்பதுண்டு, "செட்டி" என்னும் சொல் முருகனுக்கான பெயர்களில் ஒன்று என்று சூடாமணி நிகண்டு சுட்டுகிறது. "செட்டி யெனுமோர்திரு நாமக்கார" என்று திருப்புகழின் 1026–ஆவது பாடல் சுட்டுகிறது.



செட்டி முருகன் என்றும் கூட முருகனை அழைப்பர். "செட்டிக் கப்பலுக்குச் செந்தூரான் துணை" என்றும், வேலை வணங்குவதே வேலை என்றும் வாழ்ந்தவர்கள் நகரத்தார்கள்.

இந்த இதழில் நம் நகரத்தார்களின் 96 ஊர்களில் ஒன்றாக இருந்த கண்ணனூரில் முற்கால சோழர்கள் காலத்தில் முருகப் பெருமானுக்காக கட்டப்பெற்ற முதற் கற்றளிக் கோயிலான " பாலசுப்பிரமணியர் " திருக்கோவிலைப் பற்றி காண இருக்கிறோம்.

## நகரத்தார் பகுதியில் மிகப் பழமைவாய்ந்த முருகன் அமைவிடம்

நம் நகரத்தார் வசிக்கும் ஊர்கள் அதிகம் உள்ள புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுகாவில் உள்ள கண்ணனூர் எனும் கிராமத்தில் அமைந்துள்ளது

சுப்பிரமணியன் திருக்கோயில். நகரத்தார்களின் 96 ஊர்களில் ஒன்றாக இருந்தது இக்கண்ணனூர். இவ்வூர் திருமயம் அருகில் துர்வாசபுரத்திலிருந்து 3 கி.மீ தொலைவில் இயற்கைச் சூழலில் அமைந்துள்ளது



## வரலாறு

கி. பி. 9 – ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் கட்டப்பட்டது இத்திருக்கோயில். சோழ அரசர்களில் புகழ்பெற்ற முதலாம் ஆதித்த சோழனின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அவனது ஆட்சிக் காலம் கி.பி.880 முதல் 908 வரை. அக்காலகட்டத்தில் நன்கொடை வழங்கிய கல்வெட்டு இக்கோயிலின் மகாமண்டபத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. பாண்டியர்களின் கலைப்பாணியில் கட்டப்பட்டுள்ளது. கோனாடு மற்றும் பாண்டிய நாட்டை ஒட்டிய பகுதிகளில் முதலாம் ஆதித்த சோழனின் ஆட்சி பரவிய காலத்திற்கு முன்பே, அதாவது கி.பி.880ஆம் ஆண்டிற்கு முன்பே இது கட்டப்பட்டிருக்கலாம். நன்கொடை கல்வெட்டு காணப்படும் மகா மண்டபம் முதலாம் ஆதித்த சோழன் ஆட்சிக் காலத்திலேயே கட்டப்பட்டுள்ளது.

## முதல் கற்றளிக் கோயில் :



தமிழகத்தில் எழுந்த முருகன் கோயில்களில் முதல் கற்றளிக் கோயில் (தரைமுதல் கோபுரம் வரை அனைத்தும் கற்களால் கட்டப்பட்டது) இக்கோயிலென்பது தனிச் சிறப்பு.

சாலையை ஒட்டியே இக்கோயிலைக் காணமுடிகிறது. மிக அழகாக, பார்வைக்குக் கவர்ச்சியாக இக்கோயில் அமைந்துள்ளது. கருவறை, முகமண்டபம், அந்தராளம், மகாமண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது.

தேவகோட்டங்களுள் தென்புறக் கோட்டத்தில் தட்சிணா மூர்த்தி அமர்ந்த நிலையில் அருள்பாலிக்கிறார். இவரது திருவடிகளில் முயலகன் இருக்கிறார். மற்ற கோட்டங்கள் வெறுமையாக அமைந்துள்ளன. கோயிலின் நான்கு புற மூலைகளிலும் வெளிப்புறம் பார்த்தவாறு நின்ற நிலையில் நான்கு யானைகளின் உருவங்கள் செதுக்கப்பட்டள்ளன.

## மூலவர் " பாலசுப்ரமண்யர் "



முருகப் பெருமான் பக்தர்களுக்குக் காட்சி தரும் திருக்கோலங்கள் பதினாறு. அவை, ஞானசக்திதரன், கந்தன், கஜவாகனன், சரவணபவனன், துவசேனாபதி, சுப்பிரமணியன், கார்த்திகேயன், குமரன், சண்முகன், தாரகாரி, வள்ளி மணாளன், பாலமுருகன், சேனாளி, கிரெஞ்சபேதன், சிகிவாகனன், பிரம்ம சாஸ்தா என்பன. அவற்றில் ஒன்றான பாலசுப்பிரமணியர் திருக்கோலத்தில் அருள்பாலிக்கிறார். கிழக்குப் பார்த்த திசையில் காட்சி தருகிறார். நான்கு கரங்கள். வலது மேற்கையில் திரிசூலம் உள்ளது. வலது கை அபய ஹத்தமாக பக்தர்களுக்கு அடைக்கலம் அளிக்கிறது. இடது மேல் கை ஆயுதம் ஏந்தியும், இடது கை இடுப்பில் ஊன்றிய நிலையிலும் உள்ளன. இரண்டு தோள்களின் குறுக்காக ருத்ராட்ச மாலை அணிந்துள்ளார். கால்களில் தண்டைகள் உள்ளன. ஆனால், கையில் வேல் இல்லை. திருத்தணி முருகனும் கையில் வேல் இல்லாமலேயே காட்சி தருவார். அலங்காரத்தின் போது மட்டுமே தனியே வேல் வைத்து வழிபடுவர். இக்கோயிலிலும் அம்முறையே பின்பற்றப்படுகிறது.

மூலவரான முருகன் மிகவும் சக்தி வாய்ந்தவராகக் இருப்பதால், கருவறைக்கு நேராக வாசல் இருந்ததை அகற்றி அங்கு பலகணி எனப்படும் சன்னல் அமைக்கப்பட்டுள்ளது. இதனால், கோயிலின் பக்கவாட்டில் தெற்கு நோக்கி வாசல் அமைக்கப்பட்டுள்ளது. இச்சன்னலில் 9 துவாரங்கள் உள்ளன. இதன் வழியே முருகனைத் தரிசிக்க கிரகதோசம் நீங்கும் எனக் கூறப்படுகிறது.

கருவறை சுவரில் உள்ள தூண்கள், பூதகணங்கள், மேற்கூரைகள் கலை நயத்துடன் செதுக்கப்பட்டுள்ளன. அர்த்தமண்டபத்தில் மயில்வாகன முருகன் சன்னதி ஒன்றும் உள்ளது. இச்சிலை பிற்காலத்தில் பிரதிஷ்ட்டை செய்யப்பட்டிருக்கலாம்.

## யானை வாகனன்



அம்முருகனின் வாகனம் எது எனக் கேட்டால், மயில் என சிறு குழந்தை கூட கூறிவிடும். ஆனால், மயில் மட்டும் முருகனின் வாகனமல்ல. ஆடு, குதிரை, யானை முதலியனவும் வாகனங்களாக இருந்திருக்கின்றன.

யானை வாகனமான புராணக் கதையாக ஒன்று கூறப்படுகிறது. திருச்செந்தூரில் சூரனை வதம் செய்து தேவர்களைக் காத்தார் முரகன். அதற்குப் பிரதிபலனாக இந்திரன் தன் மகளான தெய்வயானையை மணம் முடித்து வைக்கிறார்.

திருமணம் முடிந்ததும் தெய்வயானையுடன் திருத்தணியில் போய் அமர்ந்தார். தெய்வயானைக்குச் சீதனமாக ஐராவதம் யானை வழங்கப்பட்டதாகப் புராணம் கூறுகிறது. எனவே, திருத்தணியில் உள்ள முருகப் பெருமான் ஆலயத்தில் முருகனின் வாகனமாக யானையே உள்ளது. இவ்வாறு முருகனது வாகனமாக யானை வந்தது.

பிணிமுகம் என்று அந்த யானை அழைக்கப்படுகிறது. யானை மேலுள்ள முருகனின் கோலத்தைக் குமார தந்திரம் போன்ற பல நூல்கள் சொல்கின்றன.

> திருமுருகாற்றுப்படையில் நக்கீரர்,
> "வேழம் மேல்கொண்டு"
> "அங்குசம் கடாவ ஒரு கை"
> "ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி"

என்றெல்லாம் பாடுவதன் மூலம் தொடக்க காலத்தில் முருகனின் வாகனமாக யானை பெரிதும் போற்றப்பட்டுள்ளது.

அத்தகைய யானையை வாகனமாகக் கொண்ட முருகன் கோயில்கள்,

1. பிரான்மலை முருகன்
2. நாகப்பட்டினம் மாவட்டம் தில்லையாடிக்கு அருகில் உள்ள திருவிடைக்கழி முருகன்
3. திருத்தணி முருகன்
4. சுவாமி மலை முருகன்
5. உத்திர சுவாமி மலை முருகன் ( போபால்)
6. உத்திர மேரூர் குமரன் குன்றம்
7. கண்ணனூர் பாலசுப்பிரமணியர் கோயில்.

இக்கோயிலும் அத்தகைய யானையை வாகனமாகக் முருகனுக்கு வாகனமாக கொண்டுள்ளது. மகாமண்டபத்தில் கருவறையின் நேர்கோட்டில் பலிபீடமும் அதன் வலப்புறத்தில் யானைவாகனம் நிறுவப்பட்டுள்ளது. மகாமண்டபத்தின் வடபுறச் சுவரை ஒட்டி 1 ½ அடி உயரம் கொண்ட மேடை அமைந்துள்ளது.

## விழாக்கள் :



தினமும் ஒரு கால பூசை நடைபெறுகிறது. வருடம் தோறும், வைகாசி விசாகம், கந்த சஷ்டி, திருக்கார்த்திகை, தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடக்கின்றன. தைப்பூச நன்னாளில் அன்னதானமும் இத் திருக்கோவிலில் நடைபெறுகிறது.

இத் திருக்கோவிலில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலும், கோயில் தொடர்பான பராமரிப்பு தொல்லியல் துறையின் வசமும் உள்ளது.

## ஆலய மகிமை :

இத்திருக்கோவில் குறித்து மதுரை – வேதாங்கக் கல்விப் பயிற்சி அறக்கட்டளை நிறுவனரும், சோதிட ஆய்வாளருமான ஆச்சார்யா ஜயகண்ணன் அவர்களிடம் கலந்துரையாடியபோது, அவர் இந்த "ஆலய மகிமைகள்" குறித்து கூறிய "சோதிட ரீதியான"

விளக்கங்கள் – ஆச்சர்யம் அளித்தது. அவர் கூறியதாவது... சோதிட ரீதியாக செவ்வாய் கிரகத்திற்குரிய அதி தேவதை – முருகப் பெருமான் ஆகும். அதே போல், கேது கிரகத்திற்குரிய அதி தேவதை – யானை முகன் விநாயகர் ஆகும்.அதுவல்லாமல், யானை – குரு பகவானைக் குறிப்பதுமாகும்.

இந்த கண்ணனூர் – பால சுப்ரமணியர் திருக்கோவிலில் மூலவராகிய முருகப் பெருமான் – யானை வாகனத்தையே, தமது இருப்பிடத்தில் கொண்டு, அருள்பாளிப்பதால் ஒருவரது ஜாதகத்தில் குருவும் செவ்வாயும் தனித்தோ, அல்லது சேர்ந்தோ அல்லது பார்த்தோ... தோஷம் ஏற்பட்டிருந்தால், இத்திருத்தல முருகப் பெருமானுக்கு உரிய தான, அபிஷேக, அர்ச்சனை, ஆராதனைகளைச் செய்து, நவ நெய் விளக்குகளை ஏற்றி வைத்து, முருகனின் ஆறெழுத்து மந்திரத்தை – மனதில் உச்சரித்துக் கொண்டே, யானை வாகனத்தோடு சேர்த்து, வலமாக, திருச் சன்னதியை ஒன்பது முறை சுற்றி வழிபாடு செய்தால், முருகப் பெருமானின் திருவருளால்...யாமிருக்க பயமேன்!... என்ற அருளாசியைப் பெறலாம்.சத்துரு நாசம் ஏற்படும்!




அத்தோடு, இத்திருக்கோவில், செவ்வாய் தோஷத்தை – முற்றிலுமாக நிவர்த்தி செய்வதோடு, ஆண்–பெண்களுக்கு திருமண பாக்கியத்தையும், செவ்வாய்க்கான – முருகப்பெருமானின் திருவருளால் வாக்கு சித்தியும் வழக்குகளில் வெற்றியும் ஏற்படுவதோடு, இரத்த காரகர் செவ்வாய்க்குரிய அதி தேவதையாகிய முருகப் பெருமானால் இரத்த சம்பந்தமான நோய்களிலிருந்து விடுதலை கிடைக்கும். இரத்த உறவுகளிடையே ஏற்பட்ட (மண், நிலப்) பிரச்சனைகள் சுமுகமாகும்.

கரு காரகர் குருவின் திருவருளால்... குழந்தைப் பேறும், தன காரகர் குருவின் அருளாசியால்... தன பிராப்த்தியும் ஏற்படுவது திண்ணம்! என்கிறார்.

## தினசரி வழிபாடு :

திரு.மூர்த்தி என்ற சுப்பிரமணியன் குருக்கள் அருகில் உள்ள துர்வாச புரத்திலும் அர்ச்சகராகச் செயல்படுவதோடு, ஒரு கால பூசையாக காலை 11.00 மணி அளவில் கண்ணனூர் முருகன் கோயிலுக்கும் தினந்தோறும் சென்று தவறாது பூசைகளைச் செய்து வருகிறார். அவரது அலை பேசி எண் – 94427 62219.



அவர் கூறும் போது, திருச்செந்தூருக்குச் சமமானது இக்கோயில். நவதுவாரங்கள் வழியாக சுப்பிரமணியனை வழிபட்டால், திருமணத் தடை நீங்கும், மேலும், வேலை வாய்ப்பு கிடைக்கும் என்கிறார்.


## முருகனின் அதிசயம் :

ஒரு முறை, அவர் பூசை செய்வதற்காக இக்கோவிலிற்கு வந்த போது, ஒரு பெண் அங்கு அமர்ந்து இருந்திருக்கிறார். இவரைக் கண்டதும், "சாமி! நான் வெளியூரிலிருந்து வந்திருக்கிறேன். என் மகன் நெடுநாட்களாகப் பேசவில்லை. பல கோயில்களுக்கும் சென்று மன முருக வேண்டி வந்து விட்டேன். ஆனாலும் அவன் பேசவில்லை. ஒருவர் இக்கோயிலைப் பற்றிக் கூறினார். ஆகவே, இம்முருகனையும் வேண்டிக் கொள்ள வந்தேன்" எனக்குப் பிரசாதம் தாருங்கள். என் மகனிடம் கொடுத்து உண்ணச் செய்கிறேன்" என்றிருக்கிறார். அவர் நைவேத்தியம் செய்வதற்கான பொருட்கள் எடுத்துவராத நிலையில், குருக்களே அவற்றை வைத்து அங்கு பிரசாதம் தயார் செய்து கொடுத்திருக்கிறார்.

அதனை முழு நம்பிக்கையுடன் வாங்கிச் சென்ற அப் பெண் சில நாட்கள் கழித்து பேசியிருக்கிறார். "பாலசுப்பிரமணியனின் அருளால் இது நாள் வரை பேசாமல் இருந்த என் மகன், பிரசாதத்தை உண்ட சில நாட்களில் பேசிவிட்டான்" என்று மிக்க மகிழ்ச்சியுடன் சொன்னதாக குருக்கள் கூறியது மெய்சிலிர்க்கச் செய்தது.

## முருக பக்தர்களாகிய நகரத்தார்களிடம் வேண்டுவது :

இத் திருக்கோயிலில் அத்யாவசிய பராமரிப்பு பணிகள் கோவில் குருக்கள் மூர்த்தி அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தெய்வீகத்தை உயிர் மூச்சாகக் கொண்டவர்கள் நகரத்தார்கள். முருகனை அனுதினமும் வழிபடுபவர்கள் நம்மவர்கள். நம் நகரத்தார் ஊர்களில் ஒன்றான கண்ணனூரில் இக்கோயில் அமைந்துள்ளது. நம் பகுதியில் அமைந்துள்ள முதல் கற்றளிக் கோயிலும் இதுவே. அதிகமாக மக்களிடம் சென்று சேராத நிலையில் அதன் அருமை பலருக்கும் தெரியவில்லை. கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றொரு பழம் மொழி உண்டு. ஆனால், மிகச் சிறந்த பெருமை வாய்ந்த இக் கோயில் இருக்கும் ஊரில் அக் கோயில் கண்டுகொள்ளப்படாமல் இருப்பது வருத்தம் அளிக்கிறது. ஊர் கூடித் தேர் இழுப்பது போல், அனைவரும் இறைத் தொண்டு புரிவோம். இணையில்லா முருகனருள் பெறுவோம்.






இத்திருக்கோயில் பெருமைகளை உலகளவில் அனைவரும் அறியச் செய்யவும் மற்றும் திருப்பணி, வழிபாடுகளில் இணைந்து செயல்படும் வண்ணம் பக்தர்கள் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதில் இணைய விரும்புவோர் 9659032994 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

"முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே – ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்".

(திருமுருகாற்றுப்படை – தனிப்பாடல்)



நாம் நகரத்தார்
சமூக இணையதள மின்னிதழ்

இப்போது உங்களின் மேம்பட்ட
வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

Naam Nagarathar Mobile App

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

GET IT ON Google Play

# பெருந்தலைவர்

அ ரசியல் நேர்மை காத்தவர்
ஆ சை அனைத்தும் துறந்தவர்
இ ன்பம் பொங்க வாழ்விலே
ஈ தல் வழக்கம் கொண்டவர்
உ ண்மை உழைப்பு உயர்வெனவே
ஊ ழல் அறியாத உத்தமர்
எ ண்ணும் எழுத்தும் கண்ணெனவே
ஏ ழைக்கு எடுத்து இயம்பியவர்
ஐ ம்புலன் அடக்கி வாழ்ந்தவர்
ஒ ழுக்க நன்நெறி ஓம்பி
ஓ ய்வில்லாது பணி செய்தவர்
ஔ வை வழி நடந்து
எ ஃ கின் உறுதி கண்டவர்
அ ஃ தே  காமராஜர் எனும் பெருந்தலைவர்..!







–அரு.சிவகாமி இராமனாதன்,
–ஒக்கூர்– நவிமும்பை




# செட்டிநாடு கத்திரிக்காய் பொடி வறுவல்

மதிய வேளையில் என்ன சைடு டிஷ் செய்வதென்று தெரியவில்லையா? உங்கள் வீட்டில் கத்திரிக்காய் உள்ளதா? அப்படியானால் அந்த கத்திரிக்காயைக் கொண்டு ஒரு சைடு டிஷ் செய்யுங்கள்.

அதுவும் நமது செட்டிநாடு கத்திரிக்காய் பொடி வறுவலை செய்யுங்கள். இந்த வறுவல் சாம்பார் சாதம், தயிர் சாதம் ஆகியவற்றுடன் சேர்த்து சாப்பிட அற்புதமாக இருக்கும். மேலும் இது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி சாப்பிடும் வகையில் ருசியாக இருக்கும்.



உங்களுக்கு கத்திரிக்காய் பொடி வறுவல் ரெசிபியை எப்படி செய்வதென்று தெரிந்து கொள்ள வேண்டுமா? கீழே கத்திரிக்காய் பொடி வறுவல் ரெசிபியின் எளிய செய்முறை கொடுக்கப்பட்டுள்ளது அதைப் படித்து செய்து சுவைத்து எப்படி இருந்தது என்று எங்களுடன் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

### தேவையான பொருட்கள்:

- சிறிய கத்திரிக்காய் – 8
- உப்பு – சுவைக்கேற்ப
- மஞ்சள் தூள் – 1/4 டீஸ்பூன்

### பொடிக்கு

- கடலைப் பருப்பு – 3 டேபிள் ஸ்பூன்
- மஞ்சள் தூள் – 1/4 டீஸ்பூன்
- புளி – ஒரு சிறிய துண்டு
- வேர்க்கடலை – 1 டேபிள் ஸ்பூன்
- மல்லி – 1 டேபிள் ஸ்பூன்
- எள்ளு விதைகள் – 2 டீஸ்பூன்
- வரமிளகாய் – 5
- மிளகு – 5
- கறிவேப்பிலை – சிறிது
- துருவிய தேங்காய் – 1/4 கப்

### தாளிப்பதற்கு...

- எண்ணெய் – 4 டேபிள் ஸ்பூன்
- கடுகு – 1/2 டீஸ்பூன்
- உளுத்தம் பருப்பு – 1 டீஸ்பூன்
- கறிவேப்பிலை – சிறிது

### செய்முறை:

- முதலில் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் தேங்காய், வேர்க்கடலை, மஞ்சள் தூள் மற்றும் புளியைத் தவிர, பொடி செய்வதற்கு கொடுத்துள்ள

மற்ற பொருட்களை ஒவ்வொன்றாக சேர்த்து பொன்னிறமாக வறுத்து இறக்கி குளிர வைக்க வேண்டும்.

- பின் வேர்க்கடலையை அதே வாணலியில் போட்டு வறுத்து, அதையும் வறுத்த பொருட்களுடன் சேர்க்க வேண்டும்.
- பின்பு துருவிய தேங்காயை சேர்த்து நல்ல மணம் வரும் வரை பொன்னிறமாக வறுத்து, அதையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.
- பிறகு மிக்சர் ஜாரில் வறுத்த பொருட்கள் அனைத்தையும் சேர்த்து, அத்துடன் மஞ்சள் தூள் மற்றும் புளியை சேர்த்து, நன்கு மென்மையாக அரைத்து பொடி செய்து கொள்ள வேண்டும்.
- அடுத்து கத்திரிக்காயை கழுவி, அதை நீளத் துண்டுகளாக வெட்டிக் கொள்ள வேண்டும்.





- பின் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி சூடானதும், கடுகு, உளுத்தம் பருப்பு சேர்த்து தாளிக்க வேண்டும்.
- அடுத்து அதில் கறிவேப்பிலை சேர்த்து தாளித்து, கத்திரிக்காயை போட்டு நன்கு வதக்க வேண்டும்.
- பின்பு அதில் சுவைக்கேற்ப உப்பு மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து குறைவான தீயில் வைத்து, நன்கு வேக வைக்க வேண்டும்.
- பிறகு அதில் அரைத்து வைத்துள்ள பொடியைத் தூவி நன்கு கிளறி, 10 நிமிடம் மொறுமொறுப்பாகும் வரை வேக வைத்து இறக்கினால், சுவையான செட்டிநாடு கத்திரிக்காய் பொடி வறுவல் தயார்.




கட்டுரையாக்கம்:
உமாராணி சொக்கலிங்கம்.
நற்சாந்துபட்டி ஈரோடு.



இந்தப் பகுதியில் நா ஊறும் நகரத்தார் ரெசிபிகளுடன், நம் ஆச்சிகளின் கைப்பக்குவ உணவு வகைகளின் செய்முறையினை அறியலாம். வாசகர்கள் தங்கள் ரெசிப்பிகள் இந்தப் பகுதியில் இடம் பெற செய்ய தங்களின் படைப்புகளை தங்களது விவரங்களுடன் naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் அல்லது 9791776534 என்ற எண்ணிற்கு வாட்சப் செய்யவும்




**வாழ்க வளமுடன் என்பது எதைக் குறிக்கிறது...?**

வாழ்க என்பது வாழ்த்துச் சொல். வளமுடன் என்பது ஒரு நிறைவுத் தன்மையைக் குறிக்கும். வாழ்க வளமுடன் என்று ஒருவர் வாழ்த்தினால் நிறைவுத் தன்மையுடன் வாழ்க என்று ஒருவர் வாழ்த்துகிறார் என்று அர்த்தம்.




**ஒருவன் எப்போது நிறைவுத் தன்மை அடைய முடியும்?**

தேவைகள் பூர்த்தியடையும் போது நிறைவுத் தன்மை ஏற்படும். தேவைகளை எப்படி பட்டியலிடுவது. மனிதனின் பொதுவானத் தேவையை எளிதாக பட்டியலிட்டு விடலாம்.

**ஒருவன் மகிழ்ச்சியாக வாழ ஐந்து தேவைகள் முக்கியம்.**

1. உடல் நலம்
2. நீளாயுள்
3. நிறைச்செல்வம்
4. உயர்புகழ்
5. மெய்ஞானம்.

இந்த ஐந்தையும் உணர்ந்து அனுபவித்து கடந்து வாழும் வாழ்க்கை தான் முழுமையான வாழ்க்கை. உலகின் எல்லா இன்பங்களும் இந்த ஐந்தில் அடங்கிவிடும். வாழ்க வளமுடன் என்று ஒருவர் உச்சரித்து வாழ்த்தும் போது, நீங்கள் இந்த ஐந்து செல்வங்களையும் பெற்று வாழுங்கள் என்று வாழ்த்துகிறார்.

இது வெறும் வார்த்தை ஜாலமல்ல! இதுனூடே ஒரு ஆழமான உளவியல் தன்மை ஒளிந்து இருக்கிறது. அடுத்து இதன் பின் ஒரு அறிவியல் தன்மாற்றமும் இருக்கிறது.

அது என்ன ?

வாழ்க வளமுடன் என்று இன்னொரு முறை உச்சரித்து பாருங்கள். உங்களின் உள் நாக்கு அதாவது தொண்டையின் உள் மேல் பகுதியில் "ழ்" எனும் போது ஒரு அழுத்தம் நிகழ்வதை உங்களால் உணர முடியும்.

உள்நாக்கின் உச்சியில் அதாவது நெற்றிக்கும், பின் மண்டையில் பிடறிக் கண்ணுக்கும் நேர் கோட்டில் ஒரு சூட்சுமம் ஒளிந்துள்ளது. அந்த சூட்சுமம் இந்த பிரபஞ்சத்தோடு நேரடியாக தொடர்பு கொண்டிருக்கும் சக்தி.



உங்களின் எண்ணங்களில் எழும் தேவைகளை பிரபஞ்சத்தில் கட்டளையாக மாற்றி அதனை பெற்றுத் தரும் சூட்சுமம் அது. உங்கள் எண்ணம் வலிமைமிக்கது என்றால், அது உங்கள் மூலமாகவே செயலுக்கு வந்துவிடும். கொஞ்சம் பலகீனமான எண்ணம் என்றாலும் நீங்கள் கவலைப்படத்தேவையில்லை.

நீங்கள் பேரப்பிள்ளைகளை எடுப்பதற்குள்ளாவாவது செயலுக்கு வந்துவிடும். எண்ணம் எப்போது வீணாவது இல்லை. எண்ணமும் வீணாவது இல்லை. அதனால் எண்ணுவதை வலிமையாக எண்ணுவது சாலச்சிறந்தது.



அந்த சூட்சுமப் பகுதியை அறிவியலில் பீனியல் சுரப்பி என்பார்கள். ஆன்மிகத்தில் துரியம் என்பார்கள். வாழ்க வளமுடன் உச்சரிக்கும் போதும் உங்களின் துரியமையம் கட்டளைகள பிரபஞ்சத்திற்கு அனுப்பிக்கொண்டே இருக்கும்.



ஒருவர் உங்களை வாழ்த்தும் போது நீங்கள் வளமுடன் வாழ கட்டளைகளை அவர் பிரபஞ்சத்திற்கு அனுப்பிக் கொண்டே இருக்கிறார் என்று அர்த்தம்.

வாழ்க வளமுடன் வெறும் வாழ்த்துச் சொல் அல்ல... அது ஒரு மந்திரச் சொல்.

மனமுவந்து வாழ்த்துவோம்..!
மகிழ்வுடன் வாழ்வோம்..!!

வாழ்க வளமுடன்..!!!

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar
Join Telegram

# கம்பு சாப்பிட்டால் கிடைக்கும் ஆரோக்கியம்!

சமீப காலமாக சிறுதானியங்கள் பயன்பாடு அதிகரித்து காணப்படுகிறது. சிறுதானியங்களில் இருக்கும் சத்துக்களும் வைட்டமின்களும் எண்ணற்ற பயன்கள் கொண்டவை.



ஆரோக்கியமான வாழ்க்கை முறையை கடைபிடிக்க விரும்பும் பலரும் கம்பு, சோளம், வரகு, திணை போன்ற சிறுதானியங்களை தங்கள் உணவில் சேர்த்து வருகின்றனர். சிறு தானியங்களை சாப்பிட்டால் குச்சி ஊன்றும் வயதிலும் யாருடைய உதவியும் இன்றி சுயமாகவும், திடமாகவும் வாழலாம்.

இத்தகைய சிறுதானியங்களில் கம்பு முக்கியமானது. கம்பு நம் உடலுக்கு தேவையான அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களைக் கொண்டுள்ளது. இந்த இதழில் கம்பு தானியத்தின் ஆரோக்கிய நன்மைகளை படித்தறிந்து பயன்பெறுங்கள்....

உலகில் அதிகமாகப் பயிரிடப்படும் சிறுதானியங்களில் கம்பு முதலிடத்தை பிடிக்கிறது. கம்பு ( Pennisetum glaucum, Pearl Millet) இது ஒரு புன்செய் நிலப்பயிர்.



பொதுவாக ஆப்ரிக்கக் கண்டத்தில் இது தோன்றியதாகக் கருதப்படுகிறது. ஏறத்தாழ 40–க்கும் மேற்பட்ட நாடுகளில் விளைந்து உணவுப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் கம்பு மனிதர்களுக்கு உணவாகவும், கால்நடைத் தீவனமாகவும், எரிபொருளாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. உலகின் மொத்த சிறுதானிய உற்பத்தியில் 5 5 % இடத்தை கம்பு பிடித்திருக்கிறது. இந்தியாவில் இது அதிகம் உற்பத்தி செய்யப்படுகிறது. மானாவாரியாகவும், நீர்ப்பாசனத்திலும் கம்பு பயிராகும். இதன் விளைச்சல் காலம் 3 முதல் 4 மாதங்கள் ஆகும்.

கம்பு எல்லா வகை மண்ணிலும் விளையும் தன்மையுடையது.

### 2000 ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் கம்பு :

இந்தியாவில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் கம்பு 2000 ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது தெரியவருகிறது. கம்புப் பயிர் வறட்சியையும் தாங்கிக்கொண்டு வளரக்கூடியது. அதிக தட்ப வெப்ப சூழலிலும், குறைவான ஊட்டமுள்ள நிலங்களிலும் கூட வளரும் தன்மை உடையது.

### கம்பில் உள்ள உயிர்ச்சத்துகள்



தானியங்களிலேயே அதிக அளவாக 11.8 சதவிதம் புரோட்டீன் கம்பில்தான் உள்ளது. ஆரோக்கியமான தோலிற்கும், கண்பார்வைக்கு முக்கிய சத்தான வைட்டமின் ஏவை உருவாக்குவதற்கு முக்கிய காரணியான பீட்டா கரோட்டீன் கம்பு பயிரில் அதிக அளவில் உள்ளது.

100 கிராம் கம்பில்,
42 மில்லி கிராம் கால்சியம் சத்து உள்ளது.
11 முதல் 12 மில்லி கிராம் இரும்புச் சத்து உள்ளது.
பி 11 வைட்டமின் சத்து 0.38 மில்லி கிராம் உள்ளது.

ரைபோபிளேவின் 0.21 மில்லி கிராம் உள்ளது.
நயாசின் சத்து 2.8 மில்லி கிராம் உள்ளது.
வேறு எந்தத் தானியத்திலும் இல்லாத அளவு 5 சதவிதம் எண்ணெய் உள்ளது. இந்த எண்ணெயில் 70 சதவிதம் பலப்படி நிறைவுறாக் கொழுப்பு அமிலம் உள்ளது. இது உடலுக்கு மிகவும் உகந்த கொழுப்பு ஆகும்.

## கம்பு தானியத்தின் மிகச்சிறந்த ஆரோக்கிய நன்மைகள் :-



முழு தானியமான கம்பில் உடலுக்கு நன்மை பயக்கக்கூடிய பல நன்மைகள் நிறைந்துள்ளன. ஆரோக்யமான உடல் நலனை கடைபிடிக்க விரும்பும் பலரும் சிறுதானியங்களை தங்கள் உணவில் சேர்த்து வருகின்றனர். இந்த சிறுதானியங்களை வைத்து கஞ்சி, களி, தோசை, இட்லி போன்ற பல உணவுகளை சமைக்கலாம். இதனை வடித்து வெள்ளை சாதத்திற்கு பதிலாகவும் சாப்பிடலாம். காலத்தால் அழிக்க முடியாத நம் நாட்டு பாரம்பரிய உணவுகளை பராமரிப்போம். இயற்கை உணவுகளை சாப்பிட்டு நோய் நொடியின்றி வாழலாம். நீங்களும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பின்பற்ற விரும்பினால், கம்பை வாரம் ஒரு முறையாவது உங்கள் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். கம்பு தானியத்தின் மிகச்சிறந்த ஆரோக்கிய நன்மைகள் பின்வருமாறு:

## உடல் எடையை குறைக்க உதவும்

கம்பு தானியத்தில் குறைந்த அளவு கலோரி மட்டுமே உள்ளது. உடலில் உள்ள தேவையற்ற கொழுப்பை குறைக்க விரும்புபவர்கள் கம்பை தங்கள் உணவில் சேர்த்துக் கொள்ளலாம். இதில் உள்ள நார்ச்சத்து குடல் இயக்கத்தை எளிதாக்கவும், உடல் எடையை குறைக்கவும் உதவும். கம்பு தானியத்தை கொண்டு செய்யப்பட்ட உணவுகளை சாப்பிடும் பொழுது உங்களுக்கு நீண்ட நேரத்திற்கு பசி எடுக்காது. இதன் மூலம் தேவையற்ற உணவு உட்கொள்ளலை தடுக்கலாம்.

## இரத்த சர்க்கரையை கட்டுப்படுத்த உதவும்

நார்ச்சத்தின் சிறந்த ஆதாரமான கம்பு சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்ற சிறந்த உணவாக அமைகிறது. அரிசி மற்றும் கோதுமை போன்ற தானியங்களுடன் ஒப்பிடுகையில் கம்பு மிகக்குறைந்த அளவு கிளைசெமிக் குறியீட்டைக் கொண்டுள்ளது. டைப் 2 சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் கம்பை தங்கள் உணவில் சேர்த்து வர இரத்த சர்க்கரையின் அளவை கட்டுக்குள் வைத்திருக்கலாம்.

## சரும ஆரோக்கியத்திற்கு நல்லது

கம்பில் புரதம், வைட்டமின் B6, துத்தநாகம், இரும்புச்சத்து மற்றும் ஃபோலேட் போன்ற பல ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன. இந்த ஊட்டச்சத்துக்கள் யாவும் ஆரோக்கியமான முடி மற்றும் சருமத்திற்கு அத்தியாவசியமானவை. கம்பை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இந்த ஊட்டச்சத்து குறைபாடுகளையும் தடுக்கலாம். உங்கள் சருமத்தில் இயற்கையான பளபளப்பைத் தக்கவைத்துக்கொள்ள, இறந்த சரும செல்களை நீக்க கம்பு தானியத்தை சாப்பிடலாம்.

## இதய ஆரோக்கியத்திற்கு நல்லது

கம்பு தானியத்தில் உள்ள மெக்னீசியம் இதயத்தை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள உதவுகிறது. மேலும் பொட்டாசியம் நிறைந்த கம்பு இதயத்தின் இரத்த நாளங்களை விரிவுபடுத்தி, இரத்த ஓட்டத்தை சீராக்குகிறது. தமனிகளில் இரத்த ஓட்டம் சீராக இருப்பதால் மாரடைப்பு போன்ற கடுமையான இதயம் சார்ந்த நோய்களை தடுக்கலாம்.

## நச்சுக்களை வெளியேற்றும்

கம்பு தானியத்தில் உள்ள ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் வயது முதிர்வின் அறிகுறிகளை தாமதப்படுத்துகின்றன. சிறுநீரகம் மற்றும் கல்லீரலின் ஆரோக்கியத்தை பராமரிப்பது முதல் புற்றுநோயை தடுப்பது வரை கம்பு சாப்பிடுவதால் ஏராளமான நன்மைகளை பெறலாம். இது உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றி உங்கள் ஆரோக்கியத்தை பாதுகாக்கும்.



நோயின்றி ஆரோக்கியமாக வாழ, இத்தகைய நன்மைகள் உடைய கம்பு தானியத்தை வாரத்தில் ஒரு முறையாவது சேர்த்துக் கொள்ள முயற்சி செய்வோம்!

## நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்களுக்கு.....


வரும் ஆகஸ்ட் 2024 இதழிலிருந்து
NAGARATHAAR KAPITAL வழங்கும்
IPO, UN–LISTED SHARES, GREY MARKET PREMIUM
குறித்த செய்திகளை வாசிக்கலாம்...

**NAGARATHAAR KAPITAL**
**கார்த்திக் முத்தப்பன்**

**# For further Details Contact:**

**+91-9790755337** **+91-9884072224**

**nagarathar.capital@gmail.com**


## நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இப்போது உங்களின் மேம்பட்ட
வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

**Naam Nagarathar Mobile App**

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

GET IT ON
Google Play

# வாங்க பேசலாம்..!

## (செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள்)

பகுதி – 8



– பேரா. கு. அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

**நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் தனித்துவமாகப் பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குச் சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம்... வாங்க பேசலாம்..!**



வட்டார வழக்குச் சொற்களில் பெரும்பாலானவை, ஒரு இனக் குழுவானது வெளிநாடுகளுக்குச் சென்ற போது அங்குள்ள பேச்சு வழக்கிலுள்ள சொற்கள் அக்குழுவின் சொற்களாக மாறுவது உண்டு, ஆனால், நகரத்தார்களின் பேச்சு வழக்குச் சொற்களில் வெளிநாட்டுச் சொற்கள் மிகக் குறைவே. அதிகமாக இலக்கியச் சொற்களையே பயன்படுத்துவது இவர்களின் சிறப்பு. அச்சிறப்பு மிக்க சொற்களை அறிவதே இக் கட்டுரையின் நோக்கம்.

**அதக்கு**

அம்மா சிறு வயது மகனிடம் " வாய்குள்ள என்னத்தடா அதக்கி வச்சிருக்க" முழுங்கித் தொலையப் போற. வாய்குள்ள இருந்து எடுடா" என்று பேசு வதைக் கேட்டிருப்போம்.



வாய்க்குள் விரலைவிட்டுத் தோண்டியதையும் பார்த்திருப்போம். மிகத் தூய தமிழ் சொல் **அதக்கு** என்பது. அலுக்கு என்னும் சொல்லிருந்து உருவானது அதக்கு. அலுக்கு என்றால் அசைத்தல் என்பது பொருள். அலுக்கு – அதுக்கு – அதக்கு என மருவி வந்துள்ளது. அதாவது, அசைத்து அடக்குதல் என்பது பொருள்.

**அதட்டு**

"என்னடா அதட்டி பேசுற? அந்தளவு பெரியாளாயிட்டியா? மட்டுமரியாதையில்லாமப் போச்சு. அவுக வரட்டும் பாத்துக்கிறேன்" என்று ஆற்றாமையால் பேசும் அம்மாக்களைப் பார்த்திருப்போம். அரட்டு என்ற சொல் அதட்டு என்று மருவியுள்ளது.



அதிக ஓசையோடு பேசுவது என்ற பொருள்படும். அதட்டிப் பேசினால் உண்மை அழிந்தா போகும் என்பது பழமொழி. (சத்தம் போட்டு பேசினால் நீ பேசுறது உண்மையாயிருமா? என்பது அப்பழமொழியின் பேச்சு வழக்கு)

**அதிகப்பிரசங்கி**



"தம்பி இப்ப நம்ம வீட்டுக்கு, பங்காளி வீட்டுப் பெரியவுகளெல்லாம் வராக. தேவையில்லாம அதிகப்பிரசங்கியாட்டாம் பேசாத. இப்பவே சொல்லிட்டேன்" இதில் அதிகப் பிரசங்கி என்பது அதிகமாகப் பேசுவது என்ற பொருள் படும். பிரசங்கம் என்றால் சொற்பொழிவு என்பது பொருள். வாய் ஓயாது, வளவளவென்று பேசுபவர்களை அதிகப்பிரங்கி என்றழைப்பது வழக்கம்.

**அத்தக்கூலி**

"மாப்பிள்ள என்ன வியாபாரம் செய்யிறாக? அந்த வியாபாரமா? அது அத்தக்கூலி பொழப்பாச்சே" அத்தக் கூலி என்பது நிலையான வருமானம் இல்லாது அவ்வப்போது செய்யும் வேலைக்குக் கூலியாகப் பெறும் பணத்தைக் குறிப்பதாகும்.

**அத்தறுதி**

"இப்புடி அத்தறுதியா விட்டுட்டுப் போயிட்டானே. இனி அந்தக் குடும்பம் என்னவாகுமோ?" என்று அங்கலாய்க்கும் அப்பத்தாக்களைப் பார்த்திருப்போம். அத்தறுதி என்பது இறுதியாக முடிவாக எனப் பொருள்படும்.

**அதிட்டக்கட்டை**

வாழ்வில் சுகங்களை அதிகம் அனுபவிக்காமல் துன்பத்தை அதிகம் அனுபவிப்பவரை அதிட்டக்கட்டை என்பர். "நான் ஒரு அதிஷ்டக்கட்டை. இந்த வீட்டுல வந்து அவதிப்படுரேன்" என்ற பெண்களின் வார்த்தைகளில் புலப்படுவது அதிட்டமின்மையே.

**அப்பாவி**



"யாரு? குமரேசனா? அவன் ஒரு அப்பாவிப் பய. அவனப் போயி ஏமாத்தியிருக்கானே?" என்று சொல்லும் அப்பாவி என்பது வெள்ளந்தியானவன் எனப் பொருள் தரும் சொல். பாவி – தீய செயல்கள் செய்பவன். அ+பாவி= அப்பாவி – தீய செயல்களைச் செய்யாதவன் என்ற பொருளில் நல்லவன் எனப் பொருள்படும்.

தொடர்ந்து பேசுவோம்.....

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram

# சிறுவாபுரி நகரவிடுதி மாதந்திர கிருத்திகை வழிபாடு



நமது சிறுவாபுரி நகர விடுதியில் வைகாசி மாத கிருத்திகை 05/06/2024 புதன்கிழமை அன்று நடைபெற்றது. அன்றைய தினம் காலை 7 மணிக்கு வேலுக்கு அபிஷேகமும் மதியம் 12 மணிக்கு மஹா தீபாராதனையும் நடைபெற்றது.


பக்தர்கள் திரளாக கலந்த இந்த நிகழ்வில் காலை மற்றும் மதியம் அன்னதானம் உபயதாரர்கள் கானாடுகாத்தான்
திரு. A.லெட்சுமணன் செட்டியார் குடும்பத்தினர் மற்றும் தேவகோட்டை திரு.S.V.சின்னசேவுகன் செட்டியார் குடும்பத்தினர்  குடும்பத்தினர் சார்பில் நடைபெற்றது.

வழிபாடு ஏற்பாடுகளை நகரத்தார் சிறுவாபுரி பாதயாத்திரை டிரஸ்ட் குழுவினர் செய்திருந்தனர்.

நகரத்தார் பெருமக்கள் சிறுவாபுரி மாத கிருத்திகை வழிபாட்டு அன்னதான நிகழ்வில் பங்கு கொள்ள பின்வரும் நகரத்தார் சிறுவாபுரி பாதயாத்திரை டிரஸ்ட் அமைப்பின் அங்கத்தினர்களை தொடர்பு கொள்ளலாம்

திரு.SP சிதம்பரம் புரவலர் (9444274720)
திரு.K.சிதம்பரம் தலைவர் (9080264411)
திரு.PR.மீனாட்சிசுந்தரம் செயலாளர் (9444183688)
திரு.முத்தையா சம்பத் பொருளாளர் (9710066980)

# பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...



க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) நகரத்தார்கேப்பிட்டல் – சென்னை

நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர் ஹர்ஷவர்த்தினிஸ்ரீ (நெற்குப்பை ) எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும், ஒவ்வொரு மாதமும் ஒரு நிறுவனம் குறித்த பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் பார்க்கலாம்.

**இந்த இதழில் ஒரு நிறுவனத்தை பற்றிய விரிவான பகுத்தாய்வு.**

EPACK DURABLE

## இந்நிறுவனத்தைப் பற்றி:

EPACK Durable Limited, ஏப்ரல் 20, 2019 அன்று, உத்தரபிரதேசத்தின் கிரேட்டர் நொய்டாவில் 'EPACK Durables Solutions Private Limited' ஆக, நிறுவனங்கள் சட்டம், 2013 இன் கீழ், ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக, சான்றிதழின் படி நிருவப்பட்டது. M/s E–Vision, ஒரு கூட்டாண்மை நிறுவனத்தை (ஜூலை 16, 2005 தேதியிட்ட கூட்டாண்மை பத்திரத்தின்படி 2005 இல் ஒரு தனியார் நிறுவனமாக உருவாக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, ஜூலை 30, 2021 அன்று நடைபெற்ற அசாதாரண பொதுக் கூட்டத்தில் அதன் பங்குதாரர்களால் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, நிறுவனத்தின் பெயர் 'EPACK Durables Solutions Private Limited' என்பதில் இருந்து 'EPACK Durable Private Limited' என மாற்றப்பட்டது. நிறுவனத்தால் மேற் கொள்ளப்படும் முக்கிய வணிகத்தைப் பிரதிபலிக்கும் வகையில் நிறுவனத்தின் மறுபெயரிடுதல், அதன் விளைவாக, செப்டம்பர் 17, 2021 தேதியிட்ட புதிய ஒருங்கிணைப்புச் சான்றிதழ், நிறுவனத்திற்கு RoC ஆல் வழங்கப்பட்டது.

EPACK Durable (EPACK) ஆனது RACகள், இண்டக்ஷன் குக்டாப்கள், ஜூசர்–மிக்சர் கிரைண்டர்கள் மற்றும் OEMகளுக்கான வாட்டர் டிஸ்பென்சர்கள் போன்ற நுகர்வோர் சாதனங்களின் ஒப்பந்த உற்பத்தியாளராகத் தொடங்கியது. பின்னர் 2012 இல் அது காற்றுச்சீரமைப்பிகள் மற்றும் சிறிய வீட்டு உபயோகப் பொருட்களுக்கான அசல் வடிவமைப்பு உற்பத்தியாளராக (ODM) மாற்றப்பட்டது.

அதன் பிறகு அவை கணிசமாக வளர்ந்து இரண்டாவது பெரியதாக மாறியுள்ளன~24% சந்தைப் பங்கைக் கொண்ட ODM பிளேயர். EPACK உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சிங்கானியா மற்றும் போத்ரா குடும்பத்தால் நிறுவப்பட்டதுவிரிவான தொழில் அறிவு மற்றும் அனுபவத்துடன் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக நுகர்வோர் பொருட்களை தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

EPACK Durable ஆனது இந்தியாவில் உள்ள இரண்டாவது பெரிய அறை ஏர் கண்டிஷனர் ஒரிஜினல் டிசைன் உற்பத்தியாளர் ("ODM") ஆகும், இது 2023 நிதியாண்டில் அதன் ODM வழியில் தயாரிக்கப்பட்ட உட்புற மற்றும் வெளிப்புற அலகுகளின் எண்ணிக்கையில் உள்ளது. EPACK Durable இன் நிபுணத்துவம் பல்வேறு போர்ட்ஃபோலியோவை தயாரிப்பதில் உள்ளது. அறை ஏர் கண்டிஷனர்கள் மற்றும் சிறிய வீட்டு உபயோகப் பொருட்கள் (எஸ்டிஏக்கள்), இன்னும் பல.

EPACK குழுவானது நாட்டில் உள்ள EPS பேக்கேஜிங்கின் மிகப்பெரிய செயலி ஆகும். நாட்டில் ரூம் ஏர் கண்டிஷனரின் இரண்டாவது பெரிய உற்பத்தியாளர் (ODM– அசல் வடிவமைப்பு உற்பத்தியாளர்). இந்தியாவில் மிக வேகமாக வளர்ந்து வரும் மற்றும் விரைவில் "நம்பர்–1 ப்ரீ இன்ஜினியரிங் கட்டிடங்கள் உற்பத்தி நிறுவனம்" ஆகும்.

### இந்நிறுவனத்தின் தயாரிப்புகள்:

EPACK Durable இன் தயாரிப்பு போர்ட்ஃபோலியோவில் அறை ஏர் கண்டிஷனர்கள், சிறிய வீட்டு உபயோகப் பொருட்கள், வெப்பப் பரிமாற்றிகள், குறுக்கு–பயன் விசிறிகள், அச்சு விசிறிகள் போன்ற கூறுகள் உள்ளன.

## தீர்வுகள்

நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கு அதன் மதிப்பு கூட்டலை அதிகரிக்கும் வாய்ப்பையும் கண்டறிந்தது, அதன்படி, தாள் உலோகம், ஊசி வார்ப்பு, குறுக்கு ஓட்ட விசிறிகள் மற்றும் பிசிபிஏ கூறுகள் போன்ற பல்வேறு கூறுகளை உற்பத்தி செய்யத் தொடங்கியது. இதற்கு இணையாக, சிறிய வீட்டு உபயோகப் பொருட்கள் (எஸ்டிஏ) சந்தையில் அதன் செயல்பாடுகளை மூலோபாயரீதியாக விரிவுபடுத்துவதற்காக, அதன் தற்போதைய உற்பத்தி உள்கட்டமைப்பைப் பயன்படுத்தி, குறிப்பாக R A C களுக்கான தேவையின் பருவகாலத்தை கருத்தில் கொண்டு, தற்போது இண்டக்ஷன் குக்டாப்கள், மிக்சர்–கிரைண்டர்கள் மற்றும் வாட்டர் டிஸ்பென்சர்களை வடிவமைத்து தயாரிக்கிறது. இது அதன் செயல்பாடுகளின் பின்தங்கிய ஒருங்கிணைப்பு மற்றும் அதன் வருவாய் நீரோட்டங்களின் பல்வகைப்படுத்தல் ஆகியவற்றில் அதன் தொடர்ச்சியான கவனம் செலுத்துகிறது. அதன் தயாரிப்பு போர்ட்ஃபோலியோ தற்போது அறை காற்றுச்சீரமைப்பிகள், சிறிய வீட்டு உபயோகப் பொருட்கள், கூறுகள் போன்றவற்றைக் கொண்டுள்ளது. R A C மதிப்புச் சங்கிலி முழுவதும் பரந்த அளவிலான தயாரிப்பு தீர்வுகள் மற்றும் கூறுகளை வழங்கும் திறனை வெளிப்படுத்துகின்றன.

## உற்பத்தி வசதி மற்றும் உற்பத்தி திறன்:

EPACK Durable ஆனது டேராடூன் (உத்தரகாண்ட்), பிவாடி (ராஜஸ்தான்) மற்றும் ஸ்ரீ சிட்டி (ஆந்திரப் பிரதேசம்) ஆகிய இடங்களில் மூன்று உற்பத்தி வசதிகளைக் கொண்டுள்ளது.

2023 நிதியாண்டின் முடிவில் உற்பத்தி திறன் 0.90 மில்லியன் IDUகள், 0.66 மில்லியன் ODUகள், 0.36 மில்லியன் ODU கிட்கள், 0.42 மில்லியன் W A C கள் மற்றும் 0.11 மில்லியன் தண்ணீர் விநியோகம். கூடுதலாக, இது 1.2 மில்லியன் இண்டக்ஷன் ஹாப்ஸ் மற்றும் 0.30 மில்லியன் மிக்சர்கள் மற்றும் அவற்றின் பாகங்களை உற்பத்தி செய்யும் திறனையும் கொண்டுள்ளது. FY23 நிதியாண்டின் முடிவின்படி, EPACK Durable Ltd மொத்தம் 734 முழுநேர ஊழியர்களைக் கொண்டிருந்தது.

EPACK Durable என்பது வெப்பப் பரிமாற்றிகளுக்கு 5—மிமீ செப்புக் குழாய்களைத் தயாரிப்பதற்கான ஆரம்ப இந்திய RAC ODMகளில் ஒன்றாகும். EPACK Durable ஆனது, R32 குளிர்பதனத்துடன் கூடிய W A C களை (நிலையான வேகம் & இன்வெர்ட்டர் மாதிரிகள்) வடிவமைத்து தயாரிப்பதற்கான ஆரம்ப இந்திய RAC ODMகளில் ஒன்றாகும். இந்தியாவில் பதிவுசெய்யப்பட்ட ஒரு காப்புரிமை, இரண்டு தாக்கல் செய்யப்பட்ட காப்புரிமைகள் மற்றும் 10 பதிவு செய்யப்பட்ட வடிவமைப்புகளைக் கொண்ட நிறுவனம்.

நிறுவனத்தின் தயாரிப்பு வரம்பில் வெப்பப் பரிமாற்றி, பிரிண்டட் சர்க்யூட் போர்டு அசெம்பிளி ("பிசிபிஏ"), யுனிவர்சல் மோட்டார், காப்பர் ட்யூபிங், இன்ஜெக்ஷன் மோல்டிங், கிராஸ் ஃப்ளோ ஃபேன்கள், அச்சு மின்விசிறிகள், காப்பர் ஃபேப்ரிகேட்டட் தயாரிப்புகள், இண்டக்ஷன் காயில், ஷீட் மெட்டல் பிரஸ் பாகங்கள் மற்றும் பவுடர் கோட்டிங் ஆகியவை அடங்கும்.

**வாடிக்கையாளர்கல்:**

ப்ளூ ஸ்டார், டெய்கின் ஏர்கண்டிஷனிங் இந்தியா, கேரியர் மிடியா, வோல்டாஸ் லிமிடெட், ஹேவெல்ஸ் இந்தியா, ஹையர் அப்ளையன்சஸ் (இந்தியா), பானாசோனிக் லைஃப் சொல்யூஷன்ஸ்

இந்தியா, கோத்ரெஜ் மற்றும் பாய்ஸ் உற்பத்தி நிறுவனம் மற்றும் பஜாஜ் எலக்ட்ரிக்கல்ஸ் ஆகியவை இதன் வாடிக்கையாளர் தளத்தில் அடங்கும்.

## நிறுவனத்தின் அடிப்படை விவரங்கள்:

**Key Metrics**

| | |
|---|---|
| PE Ratio (x)<br>88.86 | EPS - TTM (₹)<br>2.78 |
| MCap (₹ Cr.)<br>2,367.09 | Sectoral MCap Rank<br>51 |
| PB Ratio (x)<br>2.72 | Div Yield (%)<br>0.00 |
| Face Value (₹)<br>10.00 | Beta<br>- |
| VWAP (₹)<br>249.80 | 52W H/L (₹)<br>269.28 / 150.60 |

**EPACK Durables Share Price Returns**

| | |
|---|---|
| 1 Day | -2.61% |
| 1 Week | 1.37% |
| 1 Month | 45.26% |
| 3 Months | 34.43% |
| 1 Year | N.A. |
| 3 Years | N.A. |
| 5 Years | N.A. |

## நிறுவனத்தின் நிதி நிலை:

**EPACK Durables Financials**

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios — CONSOLIDATED

**INSIGHTS**

**Topline Contraction**
Sales de-grew by 7.26%. Company witnessed revenue contraction for the first time in last 3 years. (Source: Consolidated Financials)

**Employee & Interest Expense**
Company has spent 2.74% of its operating revenues towards interest expenses and 3.4% towards employee cost in the year ending 31 Mar, 2024. (Source: Consolidated Financials)

| QUARTERLY \| ANNUAL | MAR 2024 | DEC 2023 | SEP 2023 | JUN 2023 |
|---|---|---|---|---|
| Total Income | 531.25 | 280.93 | 178.83 | 0.00 |
| Total Income Growth (%) | 89.10 | 57.10 | - | -100.00 |
| Total Expenses | 480.81 | 264.18 | 178.71 | 0.00 |
| Total Expenses Growth (%) | 82.00 | 47.83 | - | -100.00 |
| EBIT | 50.44 | 16.75 | 0.12 | 0.00 |
| EBIT Growth (%) | 201.12 | 0.00 | - | -100.00 |
| Profit after Tax (PAT) | 27.83 | 4.89 | -6.08 | 0.00 |
| PAT Growth (%) | 468.78 | - | - | -100.00 |
| EBIT Margin (%) | 9.49 | 5.96 | 0.07 | - |
| Net Profit Margin (%) | 5.24 | 1.74 | -3.40 | - |
| Basic EPS (₹) | 3.08 | 0.62 | -0.78 | 0.00 |

## EPACK Durables Financials

Income (P&L) | **Balance Sheet** | Cash Flow | Ratios — CONSOLIDATED

| ANNUAL | FY 2024 | FY 2023 | FY 2022 |
|---|---|---|---|
| Total Assets | 1,767.77 | 1,464.16 | 1,076.68 |
| Total Assets Growth (%) | ↑20.74 | ^35.99 | ↑106.91 |
| Total Liabilities | 875.57 | 1,150.54 | 954.81 |
| Total Liabilities Growth (%) | ↓-23.90 | ^20.50 | ^111.50 |
| Total Equity | 892.20 | 294.79 | 121.87 |
| Total Equity Growth (%) | ↑202.65 | ^141.90 | ^76.84 |
| Current Ratio (x) | 1.33 | 0.88 | 0.85 |
| Total Debt to Equity (x) | 0.37 | 1.67 | 3.15 |
| Contingent Liabilities | 0.00 | 66.85 | 73.31 |

## EPACK Durables Financials

Income (P&L) | Balance Sheet | **Cash Flow** | Ratios — CONSOLIDATED

**INSIGHTS**

**Increase in Cash from Investing**

Company has used Rs 376.64 cr for investing activities which is an YoY increase of 73.17%. (Source: Consolidated Financials)

| ANNUAL | FY 2024 | FY 2023 | FY 2022 |
|---|---|---|---|
| Net Cash flow from Operating Activities | 256.98 | 18.83 | -28.94 |
| Net Cash used in Investing Activities | -376.64 | -217.50 | -204.19 |
| Net Cash flow from Financing Activities | 166.57 | 234.55 | 253.55 |
| Net Cash Flow | 46.91 | 35.87 | 20.50 |
| Closing Cash & Cash Equivalent | 106.93 | 60.02 | 24.15 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | ↑78.16 | ^148.55 | ↑561.92 |
| Total Debt/ CFO (x) | 1.29 | 26.15 | -13.27 |

## EPACK Durables Financials

Income (P&L) | Balance Sheet | Cash Flow | **Ratios** — CONSOLIDATED

| ANNUAL | FY 2024 | FY 2023 | FY 2022 |
|---|---|---|---|
| Return on Equity (%) | 3.96 | 10.84 | 14.30 |
| Return on Capital Employed (%) | 8.82 | 16.57 | 25.11 |
| Return on Assets (%) | 2.00 | 2.18 | 1.61 |
| Interest Coverage Ratio (x) | 3.21 | 3.30 | 2.45 |
| Asset Turnover Ratio (x) | 0.88 | 1.21 | 1.16 |
| Price to Earnings (x) | 41.15 | - | - |
| Price to Book (x) | 1.63 | - | - |
| EV/EBITDA (x) | 13.39 | - | - |
| EBITDA Margin (%) | 8.81 | 6.75 | 7.78 |

## EPACK Durables Financials

Income (P&L) | **Balance Sheet** | Cash Flow | Ratios — CONSOLIDATED

| ANNUAL | FY 2024 | FY 2023 | FY 2022 |
|---|---|---|---|
| Total Assets | 1,767.77 | 1,464.16 | 1,076.68 |
| Total Assets Growth (%) | ↑20.74 | ^35.99 | ↑106.91 |
| Total Liabilities | 875.57 | 1,150.54 | 954.81 |
| Total Liabilities Growth (%) | ↓-23.90 | ^20.50 | ^111.50 |
| Total Equity | 892.20 | 294.79 | 121.87 |
| Total Equity Growth (%) | ↑202.65 | ^141.90 | ^76.84 |
| Current Ratio (x) | 1.33 | 0.88 | 0.85 |
| Total Debt to Equity (x) | 0.37 | 1.67 | 3.15 |
| Contingent Liabilities | 0.00 | 66.85 | 73.31 |

## EPACK Durables Financials

Income (P&L) | Balance Sheet | **Cash Flow** | Ratios — CONSOLIDATED

**INSIGHTS**

**Increase in Cash from Investing**

Company has used Rs 376.64 cr for investing activities which is an YoY increase of 73.17%. (Source: Consolidated Financials)

| ANNUAL | FY 2024 | FY 2023 | FY 2022 |
|---|---|---|---|
| Net Cash flow from Operating Activities | 256.98 | 18.83 | -28.94 |
| Net Cash used in Investing Activities | -376.64 | -217.50 | -204.19 |
| Net Cash flow from Financing Activities | 166.57 | 234.55 | 253.55 |
| Net Cash Flow | 46.91 | 35.87 | 20.50 |
| Closing Cash & Cash Equivalent | 106.93 | 60.02 | 24.15 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | ↑78.16 | ^148.55 | ↑561.92 |
| Total Debt/ CFO (x) | 1.29 | 26.15 | -13.27 |

## EPACK Durables Financials

Income (P&L) | Balance Sheet | Cash Flow | **Ratios** — CONSOLIDATED

| ANNUAL | FY 2024 | FY 2023 | FY 2022 |
|---|---|---|---|
| Return on Equity (%) | 3.96 | 10.84 | 14.30 |
| Return on Capital Employed (%) | 8.82 | 16.57 | 25.11 |
| Return on Assets (%) | 2.00 | 2.18 | 1.61 |
| Interest Coverage Ratio (x) | 3.21 | 3.30 | 2.45 |
| Asset Turnover Ratio (x) | 0.88 | 1.21 | 1.16 |
| Price to Earnings (x) | 41.15 | - | - |
| Price to Book (x) | 1.63 | - | - |
| EV/EBITDA (x) | 13.39 | - | - |
| EBITDA Margin (%) | 8.81 | 6.75 | 7.78 |


## மேம்பட்ட விளக்கப்படம்:







## சகநிறுவன ஒப்பீடு:



**EPACK Durables Peer Comparison**

EPACK Durables Stock Performance | **Ratio Performance** | SEE ALL PARAMETERS


| NAME | P/E (X) | P/B (X) | ROE % | ROA % | REV CAGR [3YR] | OPM |
|---|---|---|---|---|---|---|
| EPACK Durables | 88.86 | 2.65 | 3.96 | 2.00 | 24.26 | 6.31 |
| Voltas × | 190.75 | 8.21 | 4.32 | 2.09 | 17.83 | 5.45 |
| JohnsonCtrls Hitachi × | -70.21 | 9.12 | -12.98 | -4.56 | 5.19 | -2.89 |
| Blue Star × | 84.67 | 13.42 | 15.87 | 6.26 | 30.68 | 6.34 |

Add More

## ஷேர்ஹோல்டிங் பேட்டர்ன்:

**EPACK Durables Shareholding Pattern**

**QOQ Change** | Total Shareholdings





*Showing EPACK Durables Shareholding as on 31 Mar 2024*

| CATEGORY | 31 MAR 2024 |
|---|---|
| Promoters | 48.09 |
| Pledge | 0.00 |
| FII | 1.30 |
| DII | 18.17 |
| Mutual Funds | 1.54 |
| Others | 32.44 |

**EPACK Durables Shareholding Pattern**

QOQ Change | **Total Shareholdings**




*Showing Shareholding as on 31 Mar 2024*

| CATEGORY | NO. OF SHARES | PERCENTAGE | % CHANGE QOQ |
|---|---|---|---|
| Promoters | 4,60,73,123 | 48.09 % | - |
| Pledge | 0 | 0.00 % | - |
| FII | 12,49,505 | 1.30 % | - |
| DII | 1,74,10,837 | 18.17 % | - |
| MF | 14,73,772 | 1.54 % | - |
| Others | 3,10,65,226 | 32.44 % | - |

## எமது பரிந்துரை:

இந்நிறுவனத்தின் பங்குகளை தற்போதைய சந்தை விலையான ரூபாய் 240, 250 மற்றும் குறையும் தருவாயில்18 0 ரூபாய் வரை வாங்கலாம். இலக்கு ரூபாய் 300, 350, 400+++. கால வரையறை 18 முதல் 24 மாதங்கள்.

## இந்த மாத குறுகிய கால பங்குகள் பரிந்துரைகள்:

1, **Spandana Sphoorty Financial Ltd...**
Entry 720 to 750. Target 900 and 1200.
Accumulate more on down till 600

2, **Hindustan Foods Ltd(NDA)...**
Entry 520 to 550. Target 620 and 690.
Accumulate more on down till 420

3, **Maharashtra Seamless Ltd...**
Entry 630 to 660. Target 800 and 900.
On the downside accumulate till 550

4, **Aries Agro Ltd (CN)...**
Entry 270 to 275. Target 320 and 350.
Accumulate more on down till 220

5, **IDFC First Bank Ltd...**
Entry 78 to 80. Target 90 and 100
Accumulate more on down till 70.

6, **VLS Finance Ltd...**
Entry 290 to 300. Target 340 and 380.
Accumulate more on down till 220

### பொறுப்புத் துறப்பு

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது

# NAGARATHAAR KAPITAL

Webinar Course.
Stock Market Course (Beginners).
Basics, Fundamentals, Technical (Introduction)
Stock Market Course (Advanced).
Technical, Strategies

Why One Wealth Course?
Learn from Qualified and Experienced Expert Panelists
Your search for in-depth Knowledge ends here.
You will become a Professional trader and Informed Investor
Got Learn about Different Market

Who can join?

I. Students.
II. Professionals from other sectors who want to become Part time and Full time Trader.
III. Professionals from other sectors who want to formulate their Portfolio. House Wife.
IV. Anyone who wants to make a career in Equity / Commodity / Currency Trading / to become Investment Advisor / to become Financial Advisors.

Our "Young Generation" can learn and start doing analysis to identify potential stocks @ Correct Entry / Correct Exit to win the Trade and by Investing in turn around stocks to create wealth by their own in reasonable period of time.

Webinar Dates: Every month will post it on our NAGARATHAAR KAPITAL Forum
This Month Class will be On SATURDAY 19th JULY 2024.

Webinar Timings: India Time: in 17:30Hrs-18.30Hrs / 21.00- 22.00Hrs In-Week days & 17.00Hrs-18.00Hrs / 20.00-21.00Hrs Week Ends.


# For further Details Contact: +91-9790755337 +91-9884072224

nagarathar.capital@gmail.com

# நீங்கள் எப்படி...

# சிம்ம லக்னம்..!

–ஜோதிடர் எல்லி
9894176494



நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்களுக்கு வணக்கம்.

12 லக்கன பாவகங்களை பற்றிய தொடர் கட்டுரையில் மேஷம் தொடங்கி கடகம் வரையிலும் பார்த்து விட்டோம். இந்த மாதம் சிம்ம லக்னம் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வோம்.



சிம்மம் கால சக்கரத்தின் ஐந்தாம் பாவகம்! கிரகங்களின் அரசன் என்று வர்ணிக்கபடும் சூரிய பகவானின் ஆட்சி வீடு! சிம்மம் பஞ்ச பூதத்தில் நெருப்பு தத்துவம் கொண்ட ஆண் வீடு ஆகும்.

சிம்ம அதிபதி சூரியன் தலைமை பண்புக்கு உரியவர். அரசு மற்றும் தந்தை காரகன் ஆவார். மேலும் சூரியன் ஆத்மாவை பிரதிபலிக்கும் ஆத்ம காரகனும் ஆவார்.



குரு வர்க்க லக்னமான சிம்மத்திற்கு சூரியனின் நட்பு கிரகமான செவ்வாய் பாதகாதிபதி யாக வருகிறார். ஆயினும் நான்கு மற்றும் ஒன்பதற்கு உரியவர் என்பதால் இவர் மறைத்தல் கூடாது சுப வலு பெறுவதே நல்லது.

சந்திரன் விரய, மோட்ச ஸ்தானாதிபதி சந்திரன் பொதுவாக கெடுபலன்கள் செய்வதில்லை என்றாலும் தனது ஆதிபத்ய பலன்களை செய்வார்.

சுக்கிரனும் புதனும் லக்ன பாவிகள். சுக்கிரன் பொதுவாக நற்பலன்கள் செய்வதில்லை என்றாலும் இருக்கும் இடத்தை பொறுத்து பலன்கள் அமையும்.

புதன் சூரியனுடன் சேர்ந்து ஜாதகத்தில் இருக்கும் போது புத ஆதித்த யோகம் மற்றும் நிபுணத்துவ யோகம் உண்டாகிறது இந்த நிலையில் புதன் நன்மையே செய்வார். இந்த அமைப்பில் சூரியன் வலுவான நிலையில் இருக்க வேண்டும்.

சனி பகவான் லக்னாதிபதி சூரியனுக்கு பகை கிரகமாக வருவதால் சூரியன் சனி சேர்க்கை இவர்களுக்கு நல்லதல்ல. 6 மற்றும் 7க்குடையவராக சனி வருகிறார்.7ம் வீடு களத்திரம் மற்றும் நட்பு பொதுஜன தொடர்புகளை குறிக்கும். ஆறாமிடம் கடன், வம்பு வழக்குகள், நோய், பிறரிடம் சம்பளத்திற்கு பணி புரிவது மற்றும் போட்டியில் வெல்வது இவற்றை குறிக்கிறது.

சனி இருக்கும் இடத்தை பொறுத்தும் குரு பார்வை பெறும் நிலையிலும் நற்பலன்கள் செய்வார். சனி தசா வில் உச்சம் பெற்ற சிம்ம லக்ன ஜாதகர்கள் இதற்கு உதாரணம்.

இயற்கை சுபரான குரு பகவான் 5 மற்றும் 8ம் அதிபதியாக வருகிறார். புத்தி பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதியே அட்டமாதிபதியாகவும் வருவது சங்கடம் தான்.

இருந்தாலும் குரு லக்ன சுபர்தான் குரு பகவான் லக்ன கோணத்தை பார்ப்பது இவர்களுக்கு மிக சிறப்பு. சூரியனுடன் குரு இணைவதும் சிறந்த யோகம் தான்.

**இனி சிம்ம லக்னகாரர்களின் குணாதிசயங்கள், இயல்புகள்** பற்றி பார்ப்போம்!

புதன் சூரியனுடன் சேர்ந்து ஜாதகத்தில் இருக்கும் போது புத ஆதித்த யோகம் மற்றும் நிபுணத்துவ யோகம் உண்டாகிறது இந்த நிலையில் புதன் நன்மையே செய்வார். இந்த அமைப்பில் சூரியன் வலுவான நிலையில் இருக்க வேண்டும்.




இவர்கள் தலைமை பண்பு கொண்டவர்கள் உயரிய மதிப்பு மிக்க இடத்தை எப்போதும் விரும்புவார்கள். கலங்காத இதயத்தை கொண்டவர்கள், எளிதில் அலட்டிக் கொள்ள மாட்டார்கள், பயப்படுவதில்லை. பிறரை அலட்சியமாக எண்ணுபவர்கள்

வாழ்க்கையில் நேரடியாக எதிலும் களம் காண்பார்கள். அதனால் எவரையும் நேரடியாகவே எதிர்கொள்வார்கள் இடைத்தரகர்களை நம்புவதில்லை அப்படி செயல் படும் போது பாதிப்புகளே வந்து சேர்கின்றன. எதிலும் தலைவணங்கி பிறர் கால் பிடித்து முன்னேற இயலாது இவர்களுக்கு!..நாலு பேர்களுக்கு உதவும் மனநிலை உள்ளவர்கள் இவர்கள்.

தன் நிலைக்கேற்ப தனக்கு கீழ் ஒரு சிறிய கூட்டத்தை கட்டமைத்து தனக்கான ஒரு வட்டத்தை உருவாக்கி இருப்பார்கள். வணிகம், அரசு துறை அரசு சார்ந்த பிற ஆதாயத்துறை,நேரடி கள அரசியல் என இவை அனைத்திலும் விருப்பம் உள்ளவர்கள்..

பாடல், இசை, சொற்பொழிவு, ஆன்மீகம் இவற்றில் விருப்பம் உண்டு..

மனைவிக்கு முழுமைமாக கட்டுபட்டவர்கள் சிம்ம லக்னகாரர்கள் தான் மனைவியின் அன்பிற்கு அடங்கி போவதில் பெரும் விருப்பம் கொள்வார்கள். மற்ற லக்னகாரர்களை விட இவர்களுக்கு அமானுஷ்ய சக்தி எளிதாக கிட்டும். குறி சொல்லுதல், சாமியாடிவது போன்ற ஆத்ம தொடர்புள்ள விசயங்களில் சிம்ம லக்னகாரர்களுக்கு இடம் உண்டு.

சிம்ம லக்ன பெண் ஜாதகர்கள் எப்படி இருப்பார்கள் எனில் பொதுவாக மேற்குறிப்பிட்ட பலன்கள் இரு பாலருக்கும் பொதுவானது என்றாலும் சிம்ம லக்ன பெண்களை பொறுத்தவரை குடும்பத்தில் ஆதிக்கம் செலுத்துவார்கள் !அனைவரையும் அரவணைத்து போவார்கள்!.குடும்ப பொறுப்பு சுப காரியங்களில் தலைமை ஏற்று செய்வார்கள்!.

எனவே இவர்களை புரிந்து ஏற்றுகொள்ளும் கணவன் அமைதலே வாழ்க்கை சிறக்கும்.


அதுவே மணவாழ்க்கைக்கும் நன்று. சிம்ம லக்ன ஆண்களை விட பெண்களுக்கு தந்தையார் அன்பு கிட்டும் உறவு நன்றாக இருக்கும்..



இவர்கள் திருமணம் ஆகும் வரை தந்தையார் மீது அதீத அன்பு கொண்டிருப்பார்கள் திருமணத்திற்கு பிறகு அப்படியே அதனை கணவனுக்கு மடை மாற்றி விடுவார்கள்.

சிம்ம லக்ன ஆண்கள் வீட்டில் மனைவி ராஜ்ஜியம் எனில் சிம்ம லக்ன பெண்கள் வீட்டில் கணவன் அதிகாரம் எல்லாம் கிடையாது. அதே வேளையில் கணவன் மீது பிணைப்பு, ஈர்ப்பு உண்டுதான்.

அடுத்து **சிம்ம லக்னத்திற்கு கிரகங்கள் அமையும் நிலை**யை பற்றிய விளக்கங்களையும் தெரிந்து கொள்வோம்.



முதலில் **சூரியன்**

**சிம்மத்திற்கு லக்னாதிபதி சூரியன் கண்டிப்பாக வலுத்திருக்க வேண்டும் இல்லை எனில் முற்றிலும் ஜாதகர் இயல்பு நேர்மாறாக இருக்கும். நீசம் பெறின் தாழ்வு மனப்பான்மையில் ஜாதகர் சிக்கி தவிக்கும் நிலை ஏற்படலாம். நீச சூரியன் உடன் ராகு வும் சேர்த்து விட்டால் ஜாதகர் மது பழக்கத்திற்கு அடிமை ஆவார்.**

எனவே சூரியன் திரிகோண ஸ்தானமான 1,5,9ல் அமர்ந்தால் தான் சிறப்பு எனலாம்.

இதில் 5,9ல் அமர்தல் அந்த காரக பிரச்சினைகள் ஒரு புறம் வந்து போனாலும் இன்னொரு வகையில் ஜாதகருக்கு சிறப்பே. 10 லிலும் அமரலாம். 11ல் சூரியன் அமர்தல் மிக சிறப்பாகும் இங்கு அரசு ஆதாயம் உண்டாகும்

குரு சூரியன் இணைவு பார்வை சிறந்த சிவராஜ யோகத்தை இவர்களுக்கு அளிக்கும்..

**சந்திரன்:**

மனோகாரகன் சந்திரன் விரய ஸ்தானாதிபதி ஆவதால் அவர் 3,6,8ல் மறைதல் பொதுவாக நலம்.2ல் அமர்வது பாதகம் அல்ல குடும்ப செலவுகள் மிகும். 12ல் ஆட்சி பெறுவதும் சிறப்பு தான்.

**செவ்வாய்:**

பாதகாதிபதி எனினும் முற்றிலும் இவர் சிம்மத்திற்கு பாதகம் செய்வதில்லை நன்மைகளும் செய்வார். மற்ற லக்னகாரர்களை விட இவர்களுக்கு செவ்வாய் தோஷ பாதிப்பு மிக குறைவு. இடம் பொறுத்து நன்மைகளை மிகுதியாகவே செய்வார். மூன்றில் செவ்வாய் அமர்தல் நலம் 2ல் அமரலாம். 10,11மிடங்களில் அமர்வது நற்பலன்களை செய்யும்.



**புதன் :**

8ல் அமர்ந்து நீசபங்கம் பெறுதல் சிறப்பு.5ல் புத்திர சிக்கலை ஏற்படுத்தினாலும் பொருளாதார ரீதியாக மிகப்பெரிய செல்வாக்கு ஏற்படும். 10ல் அமரலாம் நன்மை யே உண்டாகும்

**வியாழன் :**

லக்னத்தில் அமர்தல் நலம்.9ல் இருக்கலாம். 7ல் கூட இருத்தல் நலமே. ஆறாமிடம் கூடாது.

**சுக்கிரன் :**

எட்டில் இருக்கலாம் தைரியம் மிகும். 12ல் அமர்வதும் சரி

**சனி :**

சிம்ம லக்னத்திற்கு சனி பகவான் என்றவுடனே எதிராகவே செய்வார் என்று பொதுவாக எண்ணம் வேண்டியது இல்லை. முதலில் குறிப்பிட்டது போல் நல்ல நிலையில் அமையபெற்றால் மிகுந்த அளப்பரிய நன்மைகளையும் செய்வார். 2ல் அமரலாம். 3ல் அமர்தல் நன்று. 10ல் அமர்வதும் நன்மையே. 4ல் சனி எனில் தாயாருக்கு நோய் வாட்டும். கடன் சுமை அழுத்தும். சூரியன் சனி பரிவர்த்தனை மற்றும் இணைவில் சூரியனை விட சனி தசா புத்தி காலங்களில் சிறப்பான நற்பலன்கள் நடைபெறும்..

**ராகு கேதுக்கள் :**

3,6,10 போன்ற இடங்கள் சிறப்பு. சூரியன் சனி இவர்களுடன் ராகு சேரின் இவர்களுக்கு சிறப்பு அல்ல.

இதுவரையிலும் சிம்ம லக்னத்தை பற்றிய அரிய தகவல்களை அறிந்து கொண்டோம்

அடுத்த இதழில் கன்னி லக்னம் பற்றி அறிந்து கொள்வோம்.

# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக
வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல்
மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி
தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின்
பெட்டகமாக ஓர் மின்னிதழ்.

மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும்
உங்கள் கைபேசி வாயிலாக...

நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள்
மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள
எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,

**97917 76534**

www.naamnagarathar.com